செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை



(Oct'73)

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு சஅ	திருவள்ளுவர் ஆண்டு உ௦௦௪, புரட்டாசி அக்டோபர் 1973	பரல் உ

திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி

(சிலம்பு சஅ, பரல் க, கக ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருக்குறள் இன்பம்

இதனை இயற்றியவர் தவயோகி சுத்தானந்த பாரதியாரவர்களாவர். 1967இல் இதனைக் கழகப் பதிப்பாக வெளியிடும் பேறு கிடைத்தது. இதற்குமுன் இது நான்கு பதிப்புக்களைப் பெற்றுள்ளது என்று இதன் ஆசிரியர் சொல்லக்கேட்டு உவகையடைந்தேன். ''திருக்குறள் இன்பம்'' என்றால் இது திருக்குறளின் முப்பாலில் இன்பப்பாலைப் பற்றியதோவென ஐயுறுதற்கிடனுண்டாகும். டாக்டர் மு. வ. அவர்கள் பெயரில் கழகம் அமைத்திருக்கும் திருக்குறள் பரிசுத் திட்டத்தின்கீழ் தவத்திரு அழகரடிகள் இயற்றிய 'திருக்குறள் அறம்' என்ற தலைப்பில் முதற்பரிசு நூல் வெளிவந்துள்ளது. 'திருக்குறள் பொருள்'' என்ற தலைப்பில் டாக்டர் பா. நடராசன் அவர்களும், 'திருக்குறள் இன்பம்' என்ற தலைப்பில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களும் எழுத இசைந்துள்ளனர். எனவே, தவத்திரு சுத்தானந்த பாரதியார் அவர்கள் எழுதிய நூல் 'திருக்குறள் இன்பப் பாலை'ப் பற்றியதென எண்ணுவதற்கிடனாகின்றதன்றோ? ஆனால் அவர்கள் அப்படி எழுதவில்லை.

திருக்குறள் முப்பாலைப் பற்றி எழுதிய இந்நூலுக்குத் 'திருக்குறள் இன்பம்' என்று பெயர் அமைத்தமைக்குரிய காரணம் அடியிலே விளக்கப்படுகின்றது.

இதன் முதற்பதிப்புக்கு முதுபெரும் புலவர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் வழங்கிய நல்லுரையில் "திருக்குறள் இன்பத்தை இந்த முறையில் எடுத்துக்காட்டியவர் இதற்கு முன் வேறு யாருமிலர். படிக்கப்படிக்க இன்பத்தை மேன் மேலும் உண்டாக்கும் இப் புத்தகம் தமிழன்பர்கட்குக் கிடைத் தற்கரிய விருந்தாகும்" என்று குறிப்பிட்டுள்ளனர். எனவே, நூல் முழுமையுமே இதனைப் படிப்பவர்கட்கு இன்பந் தருவ தாகும் என்று திரு ஐயரவர்கள் எழுதியுள்ளனர்.

திருவள்ளுவ மாலையில்,

"சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து"

என்று பழந்தமிழ்ப்புலவர் கவுணியனூர் பாடியுள்ளனர். எனவே, நூல் முழுமையும் சிந்திப்பதற்கும், கேட்பதற்கும், பேசுவதற்கும் இன்பந்தரும் தன்மைத்தாதலின் 'திருக்குறள் இன்பம்' என்று நூல் முழுமைக்கும் தவயோகி சுத்தானந்த பாரதியார் பெய ரமைத்தனர் என்பது பொருத்தமுடையதாகும்.

முப்பாலைக்கொண்ட திருக்குறள் அறத்தில் பொருளும் இன்பமும், பொருளில் அறமும் இன்பமும், இன்பத்தில் அறமும் பொருளும் உட்கிடையாய்க் காணப்படுகின்றன என்பது அறிவுடையோர் கருத்தாகும். மக்கட்குரிய அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள் களில் வீடுபற்றித் தனியே பால் ஒன்று அமைக்கவில்லை. எனினும் முப்பாலின்கண் அதனை உய்த்துணர வைத்தமையினை அறிஞர் பெருமக்கள் அறிந்து மகிழ்வர். மாமூலனூர் என்னுஞ் செந்தமிழ்ப் பழம்புலவர் திருவள்ளுவரை,

"அறம்பொருள் இன்பம் வீடென்னும் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை"

என்று வியந்து பாராட்டியுள்ளனர். எனவே திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்ற தலைப்புக்களில் அமைக்கப் பெற்றிருப்பினும் முப்பால்களினும் வீட்டுப்பால் உட்கிடையாக அமைந்திருக்கிறது என உய்த்துணரக் கிடப்பதுபோல் ஒரு பாலினுள் மற்றப் பால்களின் கருத்துக்கள் உட்கிடையாக அமைந்திருக்கின்றன என்பதையே தவயோகியார் உய்த் துணர்ந்து தாம் இயற்றிய நூலுக்குத் 'திருக்குறள் இன்பம்' என்ற திருப்பெயரை அமைத்துள்ளனர். இது கருதி வியந்து போற்றுதற்குரியது.

நூல் க, உ, ௩ என 15 பெருந் தலைப்புக்களில் 124 உள் தலைப்புக்களை அமைத்து அவற்றின்கண் 344 திருக்குறட் பாக்களை மேற்கோளாக எடுத்துப் புதுமுறையில் தவத்திரு யோகியார் விளக்குவது படிக்குந்தோறும் படிக்குந்தோறும் இன்பப் பெருக்கினைத் தருவதாகும்.

நூல் க இல் 'கடவுள் வான் அறவோர்' என்ற தலைப்பும், நூல் உ இல் 'அறநெறி யொழுக்கம்' என்ற தலைப்பும், நூல் ௩ இல் 'சொல்லறம்', நூல் ச இல் 'தீயன விலக்கல்', நூல் ரு இல் 'நட்பும் அன்பும்', நூல் சு இல் 'கல்வி கேள்வி', நூல் எ இல் 'காதல் விளக்கம்', நூல் அ இல் 'இல்லற வொழுக்கம்', நூல் கூ இல் 'முயற்சியும் செல்வமும்', நூல் க௦ இல் 'ஈகையும் புகழும்', நூல் கக இல் 'நாடும் அரசும்', நூல் கஉ இல் 'வினைத்திறன்', நூல் க௩ இல் 'போர், புகழ், வீரம்', நூல் கச இல் 'மெய்ப்பொருளுணர்ச்சி', நூல் கரு இல் 'துறவும் தவமும்' என்ற பெருந் தலைப்புக்கள் இந்நூலின்கண் உள்ளன.

ஆனால் தவயோகியார் இதன்கண் மேற்கோள்களாக எடுத்தாண்டுள்ள 344 குறட்பாக்களையும் பால் வரிசையிலோ அல்லது அதிகார வரிசையிலோ அமைக்கவில்லை என்பது குறிப்பிடுதற்குரியது.

நூல் 2இல் "நன்னடத்தைக்கு நாணமே வேலி" என்ற 7ஆவது தலைப்பினை மட்டும் எடுத்துக்காட்டாகக் கீழே தருகின்றேன்.

"பழிபாவத்தை நாணி நடக்க வேண்டும். செய்யத்தகாத காரியத்தைச் செய்ய நாண வேண்டும். இத்தகைய நாணத்தால் தீமைகள் குறையும். ஊண், உறக்கம், மக்களைப் பெறுதல் முதலிய காரியங்கள் எல்லா உயிர்களுக்கும் பொதுவாம். நாணமே மாந்தர் சிறப்பு உயிர்களெல்லாம் ஊனுடலை இருப்பிடமாகக் கொண்டு வாழும். பெருந்தன்மைக்கு நாண் என்னும் நல்லொழுக்கமே இருப்பிடம். சான்றோர்க்கு நல்லணி நாணம். நாணமில்லாத செருக்கு நடை, கொடிய பிணியைப் போல நலத்தை யெல்லாம் தேய்க்கும்.

"அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேல்
பிணியன்றோ பீடு நடை"

நம்மால் பிறர்க்குப் பழிவராமலும், பிறர் தம்மைப் பழிக்க இடமில்லாமலும், கவனமாக, மட்டு மரியாதையுடன் நடப்பவரை "இவரே நாண மென்னும் நற்குணத்திற்கு உறைவிடம்" என்று உலகம் மதிக்கும். இந்த நாண் வேலி

யில்லாது, பெரியோர்கள் உலகைக் கொடுத்தாலும் வேண்டார்கள். அஃதாவது வெட்கமில்லாமல் இன்னொருவன் நிந்திக்கும்படி அகௌரவமான வழிகளில் உலகரசே தமக்குக் கிடைப்பதானுலும் பெரியோர் மறுத்து விடுவர். நாணமுள்ளவர்கள் உயிரைத் துறந்தாலும் துறப்பார்கள்; மானத்தை விடமாட்டார்கள். உயிரினும் நாணமே பெரிது. பிறர் கண்டு, "சீ, சீ" என்று வெட்கி வெறுக்கும் காரியத்தை ஒருவன் செய்ய நாண வேண்டும். இல்லாவிட்டால் தரும தேவதை அவனைக் காண நாணும்.

"பிறர்நாணத் தக்கது தானுணு னாயின்
அறநாணத் தக்க துடைத்து"

ஒழுக்கந் தவறினுல் குலங்கெடும். நாணந் தவறினுல் நலங்கெடும். நாணமற்றவர் உயிர்கொண்டு நடமாடுவது, கயிறு கட்டியாடும் பொம்மலாட்டம் போல வெறும் போலி நடமாட்டமாகும்.

"நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணுல் உயிர்மருட்டி யற்று"

இந்த நாணமென்னும் குணம் வாழ்விற் பதிந்தால் ஒருவரை யொருவர் மதித்து நடப்பர்; பஞ்சமா பாதகங்கள் ஒழியும். சட்டதிட்டம், காவல், நீதிமன்றம், படைகளில்லாமலே மாந்தர் மனச் சான்றின்படி பழிபாவத்திற்குப் பயந்து நடந்து ஒற்றுமையாக வாழ்வர்.

'நாகரிகத்தின் நல்லணி நாணமே'

Thirukkural with English Couplets :

1968 ஆம் ஆண்டு அக்டோபர் 14, 15 ஆம் நாள்களில் கழகச் சார்பில் 'திருவள்ளுவர் திருநாள் விழா' மிகவுஞ் சிறப்பாகச் சென்னை இராசேசுவரி திருமண மண்டபத்தில் கொண்டாடப் பெற்றது. தமிழகச் சட்ட அமைச்சர் மாண்புமிகு செ. மாதவன் அவர்கள் தலைமை தாங்கினுர்கள். தமிழக ஆளுநர் மாண்பமை சர்தார் உச்சல்சிங் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்தனர். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கலைஞர் மு. கருணுநிதி அவர்கள் திருக்குறள் பற்றிய பல்வகை நூல்களையுங் காட்சியாக அமைக்கப்பெற்ற நூல் காட்சியைத் திறந்து வைத்தனர்.

தமிழ்நாடுகாங்கிரசுக் குழுத்தலைவர் (இப்போதுநடுவணரசு தொழில் வளர்ச்சித்துறை அமைச்சர்) மாண்புமிகு சி. சுப்பிர

மணியம் அவர்கள் தவயோகி சுத்தானந்த பாரதியாரவர்களால் எழுதப்பெற்ற இடப்பாகம் திருக்குறளும் வலப்பாகம் செய்யுள் நடையில் எழுதியமைத்த ஆங்கில மொழிபெயர்ப்பும் அடங்கிய (Thirukkural with English Couplets) என்ற நூலைப் பாராட்டி வெளியிட்டனர். இதற்குமுன் 1872 இல் எட்வர்ட் சூவிட் இராபின்சன் என்னும் ஆங்கிலப் பேரறிஞர் எழுதிய Tamil Wisdom என்ற நூலில் திருக்குறள் 24 அதிகாரங்களுக்கு மட்டும் ஈரடிகளில் செய்யுள் நடையில் ஆங்கில மொழி பெயர்ப்பு உண்டு. அடுத்து அதே ஆசிரியர் Tales and Poems of South India என்ற நூலில் அறத்துப்பால் பொருட் பால் ஆக இரண்டினையும் ஆங்கிலத்தில் செய்யுள் நடையில் ஈரடியாக மொழிபெயர்த்தமைத்துள்ளனர். தமிழைத் திருந் தக் கற்றிருந்தால் மட்டும் கருத்து ஒன்றும் விடாமல் மொழி பெயர்ப்பு அமையும். அவர் தமிழை ஓரளவு கற்ற ஆங்கிலப் பேரறிஞரானதால் கருத்து முழுதும் நிறைவு பெருமல் இருப்ப தறியலானேன். ஆதலால் திருக்குறள் கருத்து முழுதும் குறைவின்றி அமையுமாறு ஈரடியில் செய்யுள் வடிவில் மொழி பெயர்த்துத் தரும்படி பன்மொழிகற்ற தவயோகி சுத்தானந்த பாரதியாரை வேண்டினேன். அவர்களும் எனது விருப்பத்தை ஏற்று Thirukkural with English Couplets என்ற நூலை எழுதித் தந்தனர். அதனைத் திருவள்ளுவர் திருநாள் நினைவு நூலாக அச்சிடலானேன்.

"1968 திருவள்ளுவர் விழா" மலரிலும் தவயோகியார் எழுதிய "வருக திருக்குறள் ஆட்சி நலம்" என்ற கட்டுரை வெளியிடப் பெற்றது.

எடுத்துக்காட்டாக ஒரு குறளுக்கு எழுதிய மொழிபெயர்ப் பினைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

67. "தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

A father's duty to his son is
To seat him in front of the wise.

தமிழ்ச் செய்யுளுக்கு ஆங்கிலத்தில் செய்யுள் நடையில் மொழிபெயர்க்கும்போது சில சொற்கள் மிகப் பொருட் செறிவு டையனவாக இருக்கும். அதனுல் அவற்றிற்குப் பொருள் காண்பது எளிதாக இருக்காது. எனவே தவயோகியார் ஆங்கி லத்தில் மொழி பெயர்த்தியற்றிய திருக்குறட்பாக்களுக்கு எளிய நடையில் ஆங்கில உரை நடையில் விளக்கம் எழுதும்படி வேண் டினேன். அவர்களும் எனது வேண்டுகோளை ஏற்று இடப்பக்கம்

ஆங்கிலத்தில் ஈரடிக்குறட்பாவும் வலப்பக்கம் 2 வரிகளில் உரை விளக்கமும் வரும்படி நூல் முழுமைக்கும் எழுதித் தந்தனர். அதனை Thirukkural Couplets with clear Prose Rendering (in English) என்ற தலைப்பில் அச்சிட்டுக் கழக வெளியீடாக 1971 மேத் திங்களில் வெளியிட்டேன்.

அந் நூலிலிருந்து ஒரு குறளை மட்டும் எடுத்துக் காட்டாகக் கீழே தருகின்றேன்.

XXIII. CHARITY

227. Who shares his food with those who need
Hunger shall not harm his creed (Couplet)

Hunger is a burning disease. It rarely affects him who shares his food with the needy. (Prose rendering)

அதற்கு நான்குபக்க அளவில் உயர்நீதிமன்ற நடுவர் மாண்பமை எஸ். மகராசன் அவர்கள் எழுதிய முன்னுரை (Foreword) அந்நூலுக்கு மிக்க மதிப்பும் சிறப்பும் அளிக்கின்றது.

ஒரு புதிய நூலை எழுதத் தொடங்குமுன் சில நாட்கள் தனியே இருந்து சிந்தனையை அடக்கி யோக நிலையில் இருப்பது தவயோகியார்க்குரிய சீரிய பழக்கமாகும். அதனை உயர்நீதி மன்ற நடுவரவர்கள் தமது முன்னுரையில் அடியிற் கண்டவாறு எழுதியுள்ளனர்.

"It is significant that before commencing this translation Suddhananda Bharathi took to a month of silence, and after commencing it, he remained in silent communion for two days every week till he completed this notable work.

"I consider that this is the first English translation of the Kural ever made by a Yogi, who has been in Maha Samadhi for a number of years, and will receive the wide acclaim and appreciation it undoubtedly deserves."

இவ்விரண்டு திருக்குறள் ஆங்கிலப் பதிப்புக்களும் மேனாட்டினரால் பெரிதும் போற்றி வாங்கப் பெறுகின்றன.

1970 திசம்பர்த் திங்களில் நடைபெற்ற கழகப் பொன்விழா வெளியீடாகத் தவத்திரு சுத்தானந்த பாரதியாரவர்கள் சேக்கிழார் பெரிய புராணத்தை ஆங்கில உரை நடையில் எழுதிய "The Grand Epic of Saivism" என்ற நூலை வெளி

யிட்டோம். அந் நூலின் கையெழுத்துப் படியினைப் பொறுமையுடன் என் பெருமதிப்புக்கும் அன்புக்குமுரிய இராவ்சாகேப் கு. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் சேக்கிழாருடைய கருத்துக்கு மாறுபடாமல் இருத்தல் வேண்டுமென்பதை உன்னிப்பாகப் பார்வையிட்டுத் திருத்தியதோடு சிற்சில இடங்களில் உரை நடையினையும் தவயோகியார் மகிழ்வோடு ஏற்கும் வண்ணம் செம்மைப்படுத்தி யுள்ளனர்.

தவயோகியார் எழுதிய 'கவிக்குயில் பாரதியார்' என்ற நூலை 1970 ஆம் ஆண்டிலும் 'சிலம்புச் செல்வம்' என்ற நூலை 1967 ஆம் ஆண்டிலும் 'திருமந்திர விளக்கம்' என்ற நூலை இவ்வாண்டிலும் அச்சிட்டு வெளியிட்டுள்ளோம்.

தவயோகியார் சப்பான், சீனு, இந்தோனேசியா, மலேசியா, ருஷியா, நார்வே, சுவீடன், பிரான்சு, இத்தாலி, ஆஸ்திரேலியா, பிஜி, மாரிசியசு, இங்கிலாந்து, இலங்கை, ஆப்பிரிக்கா ஆகிய நாடுகட்கெல்லாம் சென்று புகழீட்டி வந்தவர்கள். செந்தமிழ்ச்செல்வியில் ஆப்பிரிக்கச் சுற்றுலாவைப் பற்றித் தொடர்ந்து எழுதி வருகின்றனர். அத் தொடர் கட்டுரைகள் முடிந்தபின் தனி நூலாக அமைந்து சிறந்த பயண நூலாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. செல்வியில் அக் கட்டுரைகளைப் படிப்பவர் எப்போது அவை நூலுருப்பெறும் என அவாவிக் கேட்கின்றனர்.

தவயோகி சுத்தானந்த பாரதியார்க்கு இப்போது அகவை 77. இதுகாறும் அவர்கள் எழுதிய நூல்களில் 400க்கு மேற்பட்டவை அச்சிடப்பெற்றுள்ளன. அவற்றுள் சில ஆங்கிலத்தில் எழுதப்பட்டவையாகும். மேலும் அச்சிடுவதற்கு எழுதிவைத்திருக்கும் கையெழுத்துப் படியிலுள்ள நூல்கள் நானூற்றுக்கு மேலிருக்கும். மதுரை அருள்மிகு அங்கயற்கண்ணி திருவருளால் அவர்கட்குப் பலவகை ஆற்றல்கள் ஏற்பட்டன என்று கூறுவார்கள். தமிழ், ஆங்கிலம், சமற்கிருதம், இந்தி, பிரஞ்சு ஆகிய மொழிகளைக் கற்ற பன்மொழிப் புலவர். இயல், இசை, நாடகம், தவ இருக்கை (ஆசனம்), மருத்துவம் முதலியவற்றைக் கற்ற பல்கலைப் புலவர்.

பல பாவினங்களில் கவிபுனைபவர். அவர்கள் இயற்றிய இசைப் பாடல்களை நாம் அடிக்கடி வானொலியிற் கேட்டு மகிழ்கின்றோம். நாடகங்கள் சில இயற்றியுள்ளனர். நாடகங்களில் நடிக்குந் திறமையுமுடையவர்கள். 52,000 வரிகளில் பாரத சக்தி மகா காவியம் என்றதோர் அரிய செய்யுள் நூலைப் பல்

வகைப் பாவினங்களில் பாடிப் பதித்துள்ளனர். அவற்றை இசைக் கருவிகளோடு பாடி 17 நாடாச் சுருளைகளில் பதிவு செய்து வைத்திருக்கின்றனர். இருநூறு பாவினங்களில் பாடி யிருப்பதாகத் தவயோகியார் சொன்னது பெருவியப்பைத் தந்தது.

தவத்திரு யோகியார் நால்வர் பாடல்களில் அப்பர் பெரு மான் தேவாரப் பாடல்களிலும் மாணிக்கவாசகர் திருவாசகப் பாடல்களிலும் பேரீடுபாடு கொண்டுள்ளார்கள்.

1964இல் அண்ணா சாலையில் சென்னை மாநகர நூலகக் கட்டடத் திறப்பு விழாவுக்குச் சென்றபோது உந்துவண்டி மோதுதலால் கால் எலும்பு முறிவுற்று இராயப்பேட்டை மருத் துவமனையில் சேர்க்கப்பெற்று இரண்டு கிழமைகள் படுக்கையில் இருந்தனர். பின் முறிவுற்ற எலும்பு கூடி யாதோர் ஊனமும் ஏற்பட்டதாக இல்லாதபடி நடக்கின்றனர். தவ இருக்கை (ஆசனம்) செய்து வருகின்றனர்,

1968 இல் அடையாறு வாலன்றரி மருத்துவமனையில் இருமல் நோயால் மெலிவுற்றுச் சில கிழமைகள் தங்கியிருந்தனர். பின்னர்த் தமது தவக்கூடத்துக்குத் திரும்பித் தமது தவப்பேற் றினால் நோய் அறவே நீங்கப்பெற்று வழக்கம்போல் தம் கடமை களை ஆற்றி வருகின்றனர்.

அவர்கள் பல நாடுகட்கும், இந்தியாவில் பல மாநிலங் கட்குஞ் சென்று கற்றறிந்தார் பலர் நட்பினைப் பெற்றுள்ளனர்.

> ''யாதும் ஊரே யாவரும் கேளிர்''
>
> ''கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு''

என்ற இரு முதுமொழிகட்கும் எடுத்துக்காட்டாக விளங்குபவர் நந் தவயோகியார்.

'வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்' என்பதற்கு எடுத்துக்காட்டாக நந் தவயோகியார் அவர்கள் விளங்கினர் என்பதை இங்கே கூறுவது ஏற்புடைத்தாகும்.

1937இல் தமிழகத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு இயக் கத்தின்போது எனது அறிக்கையின்மீது 'இந்தியால் தமிழ் மொழிக்குக் கேடு வரும்' என்று கட்டுரை எழுதி அனுப்பி வைத் தனர். அதன்பின் அப்போதைய முதலமைச்சர் இந்தியைப் பள்ளிகளில் முதல் மூன்று படிவங்களில் கட்டாயப் பாடமாக வைத்தனர். அதனால் தமிழ்நாட்டில் அதனை எதிர்த்து ஊர்

வலங்களும் மாநாடுகளும் நடைபெற்றன. நம் தவயோகி யவர்கள் பேராய கட்சி அன்பர் சிலர் வேண்டுதலுக்கிணங்கி அடியிற்கண்டவாறு ஓர் அறிக்கை எழுதிக் கொடுத்தனர்:

"இந்தி உரத்த மொழி. முதல் மூன்று படிவங்களில் படிக்கிற மாணவர்கட்கு நெஞ்சு உரம்பெற வேண்டிய பருவ மாகும். எனவே இந்தியை அந்தப் பருவத்தில் படிப்பதால் நெஞ்சு உரம்பெறும்" என்று அவ்வறிக்கையிலே குறிப்பிட் டுள்ளனர்.

அவர்கள் தம் வாழ் நாட்களில் பல பெரும்புலவர்களோடும் அரசியல் தலைவர்களோடும் நெருங்கிப் பழகியவர்களாவர். எனவே எனது வேண்டுகோளை ஏற்றுப் 'புலவர் நட்பு' என்ற தலைப்பில் மறைமலையடிகள், பரிதிமாற் கலைஞன், நாவலர் நாட்டார், சவுரிராயர், சிலேடைப் புலி பிச்சுவையர், அரசன் சண்முகனார், திரு நாராயணையங்கார், பா. வே. மாணிக்க நாயகர், பாண்டித்துரைத்தேவர், ம. கோபாலகிருட்டிணையர், பெரும் பேராசிரியர் சாமிநாதையர், வில்லியப்பக் கவிராயர், தெய்வசிகாமணிப் புலவர் முதலியோர் வரலாறுகளை எழுதி யனுப்பியுள்ளனர். அவை நூலாக விரைவிலே வெளியிடப் பெறும்.

பன்மொழிப் புலமையும் பல்கலைப் புலமையும் நிறைந்த நம் தவயோகியாரும் மாயவித்தைக்காரர் ஒருவரிடம் அகப்பட்டு அல்லற்படுவதனைக் கண்டு வருந்தலானேன். அம்மாய வித் தைக்காரரைப் பயன்படுத்தித் தங்கள் செல்வாக்கைப் பெருக் கிக்கொள்ளும் அணுக்கத் தொண்டர் (Lieutenants) கள் சிலரும் உளர். அம் மாயவித்தை பெரிய இதழ்களில் விளம் பரப்படுத்தப் பெறுவதுண்டு. அதைக் கண்டு மக்கள் ஏமாறு வதையும் காண்கிறோம். 'இல்லது வாராது உள்ளது போகாது' என்ற நியதிப்படி தேங்காய் வரவழைப்பதாயின் தேங்காய்க் கடையிலுள்ள குவியலிலிருந்து ஒரு தேங்காய் ஏவலால் எடுக்கப்பட்டுவரின் அக் கடைக்காரர்க்கு அது தெரிய வாராது. இதைப்போல் சிற்சில பொருள்களைத் தாமே ஓரிடத் திலே செய்து வைத்துக்கொண்டு எடுத்துவரச் செய்து மக்களை மயக்கி வருதலுமுண்டு. நந் தவயோகியார் இவ்வுண்மையினை உணர்ந்து தப்பித்துக் கொண்டமை மகிழ்ச்சிக்குரியது.

(தொடரும்)

வ. சு.

அணையா விளக்கு!

[கோவேள்]

1. 'அகல்விளக்'கை நினைக்குங்கால்,
அண்ணாஉரு தோற்றியதே!
இகல்'மெழுகு வத்திக்'காட்சி,
அவர்பணியைச் சாற்றியதே!
பகல்காட்டும் 'மின்விளக்'கோ,
அவர்ஆற்றல் போற்றியதே!
மிகல்மா'கலம் கரைவிளக்கம்',
அவர்பேரறி(வு) ஆற்றியதே!

2. அறுபத்து ஐந்தாவது
அவர்பிறந்த இந்நாளில்,
நறுமுத்துப் போல்எட்டு
நாட்கள்விழாக் கால்கொளுங்கால்,
மறுவற்ற நம்முதல்வர்
மாகலைஞர் ஏற்றிவைத்தார்,
அறுவற்ற அண்ணாஒளி
அணையாத பெருவிளக்கே!

3. பாரப்பா, மெரினாவை;
பகல்போல நடுஇரவை!
யாரப்பா இந்நாளில்,
இன்கலைகள் ஏற்றிவைத்தார்?
பேரப்பர் வாழ்கின்ற
அமெரிக்கத் திருநாட்டில்
சேரப்பார், கென்னடிபேர்
அணையாக்கல் லறைவிளக்கே!

4. சென்னைநகர் கடற்கரையில்
செய்துவைத்த 'வத்தி'யைப்பார்;
மன்னுபுகழ் நம்அண்ணன்
மாசதுக்கப் பூங்காபார்;

சொன்னகலைப் பொன்மொழிகள்
சலவைக்கல் புத்தகம்பார்;
என்னபுயல் மழைவரினும்,
எரி'அணையா விளக்கு'ப்பார்!

5. 'அலைமேயும் கடலோரம்
துயில்கின்ற எம்அண்ணன்!
குலையாத அணையாத
குறிவிளக்கே! அருள்ஒளியே!
நிலையில்லா இருள்புரட்டை
விரட்டிவெற்றி கொள்வோம்'என,
கலைஞர்எம் முதலமைச்சர்
கட்டுரைத்தார், வாழியவே!

அண்ணுவின் புகழ்

[தவயோகி சுத்தானந்த பாரதி]

அண்ணு என்ருல் அன்புள்ளம்
அண்ணு என்ருல் அறிவருவி
அண்ணு என்ருல் அணிதமிழாம்
அடுக்குச் சொல்லின் அழகினிமை
அண்ணு என்ருல் தன்மானம்
அண்ணு என்ருல் முன்னேற்றம்
அண்ணு என்ருல் புதுவாழ்வின்
ஆக்கங் கூறும் ஆர்முரசே.

தமிழகம் இங்கே தழைக்குமட்டும்
தமிழ்மொழி யின்பம் தவழுமட்டும்
தமிழ்க்கொடி உயரப் பறக்குமட்டும்
தமிழர் உள்ளம் துடிக்குமட்டும்
தமிழர் நெஞ்சில் தமிழரத்தம்
தாவித் தாவிப் பாயுமட்டும்
தமிழார் அண்ணு வழிகாட்டும்
தாரகை போலத் துலங்குவரே.

உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

(நுல்⁴ ௩௧ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோதற் கருத்துச் சொற்கள்

நெகிழ்ச்சிக் கருத்தில் தளர்ச்சிக் கருத்தும், தளர்ச்சிக் கருத்திற் கட்டுக் குலைவுக் கருத்தும், கட்டுக் குலைவுக் கருத்தில் வலுக் குறைவுக் கருத்தும், வலுக் குறைவுக் கருத்தில் வருந்தற் கருத்தும் பிறக்கும்.

வருந்தற் கருத்தில், நோயுறுதற் கருத்தும் துன்புறுதற் கருத்தும் தோன்றும்.

இவ்வெல்லாக் கருத்துக்களினின்றும் அழிவுக் கருத்துக் கிளைக்கும்.

நுல்—நல்—நலி.

நலிதல்=1. வருந்துதல், ''தேடி நலிந்தே கண்ணுற் காணுத காரணனை'' (சிவரக. நந்திகண. 1). 2. வருத்துதல். ''நடுங்களுர் நலிய'' (பு. வெ. 12, பெண்பாற். 15, கொளு). தெ. நலி.

நலித்தல்=வருத்துதல்.

நலிவு=1. துன்பம். ''வையகத்து நலிவுகண்டு'' (பு. வெ. 8 : 34, கொளு). 2. கேடு. ''நோற்று நலிவிலா வுலகமெய்தல்'' (சீவக. 2727).

நுல்—நுள்—நொள்.

நொள்—நொள்ளா—நொள்ளாப்பு=வருத்தம்.

நொள்—நொய்—(நய்)—நை.

நைதல்=மனம் வருந்துதல்.

நைகரம்=துன்பம். ''நைகர மொழிந்து.'' (விநாயகபு. 57 : 18).

நை=துன்பம். நைவருதல்=வருந்துதல். ''நைவாரா வாயமக டோள்'' (கலித். 103 : 66). நைவு=1. வருந்துகை. 2. நோய். ''நாளு நைவகன்ற'' (தைலவ. தைல. பாயி. 1).

நைநை யெனல்=குழந்தை விடாது அழுது தொந்தரவு செய்தல்.

நை—(நய்)—நசு—நசல்=நோய் (W.).

நசலாளி=நோயாளி. (W.).

நசிருண்டி=தொந்தரவு செய்வோன். (யாழ்ப்).

நசிருளி—நசிருணி=தொந்தரவு செய்பவன். (யாழ்ப்.)

ஒ. நோ : களவாளி—களவாணி.

நசு—நசுவல்=தொந்தரவு செய்பவன்—வள்—து.

நசு நசுத்தல்=தொந்தரவு செய்தல்.

நசு நசெனல்=தொந்தரவு செய்தற் குறிப்பு.

நசு—நச்சு=1. தொந்தரவு. நச்சுப் பிடித்தவன். (உ.வ.). 2. அலப்பல்.

நச்சுதல்=1. தொந்தரவு செய்தல். 2. அலப்புதல்.

நச்சுவேலை (நச்சுப் பிடித்த வேலை)=தொந்தரவு உண்டாக்கும் வேலை.

நச்சு—நச்சி=வீண் பேச்சுப் பேசித் தொந்தரவு செய்பவள்.

நச்சுநச் செனல்=தொந்தரவு செய்தற் குறிப்பு.

நச்சுப் பிச்சு=1. தொந்தரவு. 2. ஓயாது அலப்புகை.

நொய்—(நொயி)—நொசி. நொசிதல்=வருந்துதல்.

நொசித்தல்=வருத்துதல். "நொசித்த வெம்முலை" (சீவக. 654).

நொசி—நொசிவு=வருத்தம். (சூடா.).

நொள்—நெள் (நெழு)—நெகு.

நெகுதல்=1. வருந்துதல். "இனிச் செயல் யாவதெனவுள நெக்கார்" (காஞ்சிப்பு. கயிலா. 30). 2. கெடுதல். "மாறு படமலைந் தாய்ப்படை நெக்கது" (சீவக. 426).

நொள்—நொது—நொந்து—நந்து—நந்தம்—நத்தம் = அழிந்துபோன வூரிடம், பாலைநிலத்தூர்.

பகைவரால் அழிக்கப்பட்டுப் பாழடைந்த ஊரிருந்த இடங்கள், இன்றும் நத்தப்பாழ் என்றும் நத்தத்து மேடு என்றும் சொல்லப்படும்.

நொள்—நோள்—நோளை = நோய்நிலை, நோளையுடம்பு (நோளைச் சரீரம்). (W.).

நோள்—நோய்=1. நோவு. 2. பிணி. ''நோயிகந்து நோக்கு விளங்க'' (மதுரைக். 13). 3. துன்பம். ''அதிர வருவதோர் நோய்'' (குறள். 429). 4. துயரம். (பிங்.). 5. அச்சம். ''நோயுடை நுடங்கு சூர்'' (பரிபா. 5 : 4). 6. குற்றம். ''பகலென்னும் பண்பின்மை பாரிக்கு நோய்'' (குறள். 851).

ம. நோயி.

நோயாளி=பிணியாளி.

நோய்தல்=1. நோயால் மெலிதல். 2. பயிர் நோயால் வாடுதல்.

நோய்த்தல்=1. நோயால் வருந்துதல். 2. நோயால் மெலிதல். 3. பயிர் நோயால் வாடுதல். 4. நிலம் உரமற்றுப் போதல்.

நோய்த்தல்—நோய்ச்சல்=நோய்ப்படுகை.

நோய்த்தல்—நோய்ஞ்சல்=நோயால் மெலிதல். நோய்ஞ்சல்—நோஞ்சல்=மெலிவு.

நோய்ஞ்சல்—நோய்ஞ்சலன்=நோயாளி.

நோய்ந்தான்—நோய்ஞ்சான் —நோஞ்சான் = நோயால் மெலிந்தவன்.

நோய்ஞ்சி = நோயாளி. நோய்ஞ்சி—நோய்ஞ்சியன் = நோயாளி. நோய்ஞ்சி—நோஞ்சி.

நோய்முகன்=துன்பஞ் செய்யும் காரி (சனி). (தைலவ. தைல.).

நோய்—நோ. நோதல் = 1. நோவுண்டாதல், கண் நோகிறது. (உ. வ.). 2. வருந்துதல். ''ஊரன்மீ தீப்பறக்க நொந்தேனும் யானே'' (நாலடி. 389). 3. துன்பப் படுதல். 4. வறுமைப் படுதல். நொந்த குடி. (உ. வ.). 5. துன்பத்தைச் சொல்லுதல். ''நோவற்க நொந்த தறியார்க்கு'' (குறள். 877). 6. சமைத்த வுண்டி பதன் கெடுதல். சோறு நொந்துபோய் விட்டது. (உ. வ.). க. நோ, ம. நோ (க), தெ. நோகுலு (g). நோ—நோதலே=நோதல்.

நோதல்—நோசல்=நோவு. (W.).

நோ—நோதிறம்=முல்லை பாலைத் திணைகட்குரிய துயரப் பண்வகை. (பிங்.). ''பாண்வாய் வண்டு நோதிறம் பாட'' (சிலப். 4 : 75). நோ=1. வலி. 2. நோய். (W). 3. துன்பம். ''நோநொந்து'' (குறள். 157). 4. வலுக் குறைவு. 5. சிதைவு.

நோ—நோக்காடு=1. நோவு. 2. நோய். கொள்ளையா நோக்காடா? (உ. வ.). "கண்ணோக் காடாம்" (பணவிடு. 300). 3. மன நோவு. (W.). 4. வறுமை. (யாழ்ப்.).

நோ—நோப்பு—நோப்பாளம்=1. வருத்தம். 2. சினம்.

"உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணிக்கு நோப்பாளம்" (பழ.).

நோ—நோவு=1. வலி. 2. ஈன்வலி. "ஈன்றக் காலோவும்" (நாலடி. 201). 3. நோய். 4. துன்பம். (திவா.). 5. இரக்கம். "தாம் நோவுபடா நிற்பர்" (ஈடு).

வறுமையும் நோய்போன்ற துன்பமாகக் கருதப்படுவதால், நோய் நொடி யென்றும் நோவு நொடி யென்றும் இணைத்துச் சொல்வது மரபு. நொடித்தல்=நிலை கெடுதல், வறுமைப் படுதல்.

நோவாளி=நோயாளி.

ம., க., து. நோவு.

நோ—நொ. நொதல்=துன்புறுதல். "நொக்கொற்று" (தொல். எழுத். 72, உரை). "நொப்போ வெளவுரிஞ்" (நன். 137).

நொ=1. துன்பம். "நொவ்வுற லெய்தி" (கந்தபு. திருவவ. 39). 2. நோய். (W.).

நொ—நொம்பு—நொம்பலம்=துன்பம். ம. நொம்பலம்.

நொ—நொவ்வு. நொவ்வுதல்=1. நோதல். 2. துன்புறுதல்.

நொவ்வு=மெலிவு.

நொவ்வல்=1. நோவு. 2. துன்பம். "மையற் பெண்டிர்க்கு நொவ்வ லாக" (அகம். 98).

குறிப்பு:

காரிக்கோள் துன்பந் தருவது என்னும் கருத்தினால், அது நோய் முகன் என்னப்பட்டது. ஆயின், இடைக்காலத்தில் தமிழ்ப்பகைவர் காரி என்னும் தென்சொல்லை வழக்கு வீழ்த்திச் 'சனி' என்னும் வடசொல்லைப் புகுத்தினதினால், 'சனியன்' என்னும் சொல் வழங்கத் தலைப்பட்டது. தமிழர் அனைவரும், இனி நோய்முகன் என்னும் சொல்லையே 'சனியன்' என்பதற்குத் தலைமாறாக வழங்குக.

தாயம்மை அருணசலம் திருமணவழி ஓர் உவகைச் செய்தி

'தாயம்மை' என்ற தூய தமிழ்ப் பெயர் அம்மணப் பெண்ணின் மாமனுர்க்குப் பிடிக்காமல் தமது திருமண அழைப்பில் 'ஜெகதாம்பாள்' எனக் குறிப்பிட்டு அதனை அச்சிடக் கொடுத்தனர். பெண் வீட்டார் 'தாயம்மை' என்றே தமது அழைப்பிதழில் குறிப்பிட்டுள்ளனர். இரண்டு அழைப்பிதழ்களும் ஒரே அச்சகத்தில் அச்சிடக் கொடுக்கப் பெற்றன. அச்சகத்தார் இரண்டு இதழ்களிலும் மணப் பெண்ணின் பெயரைத் 'தாயம்மை' என்றே அமைத்து அச்சிட்டுக் கொடுத்து விட்டனர். அஃது இயல்பாக நிகழ்ந்த தொன்றெனவுந் தெரிய வந்தது. அந்தத் திருமணத்தைப் பெண்ணின் தந்தையின் தமக்கையாரின் கணவனுர் தமிழ் முறையில் நடத்தி வைத்தனர். திருமணம் முடிந்ததும் வந்திருந்த பெரியோர் சிலர் மணமக்களை வாழ்த்தினர். வாழ்த்துபவர் களில் யான் ஒருவனுக விருந்தேன். யான் பேசியது வருமாறு: "இங்கே நடைபெற்ற திருமணம் நமக்கெல்லாம் நன்கு புரியும்படி தமிழ் முறையில் நடைபெற்றுப் பேருவகை யளித்தது. மணமகனின் பெயர் 'அருணசலம்'. 'அண்ணுமலை' என்ற தூய தமிழ்ப் பெயரே 'அருண சலம்' என வடமொழியில் மாற்றி அமைக்கப் பெற்றுள்ளது. இங்ஙனம் இளவழகன் 'பாலசுந்தரம்' என்றும், மதியழகன் 'சோமசுந்தரம்' என்றும் வடமொழி யாக்கி வழங்கப் பெறுதலைக் காண்கிருேம்.

"சிலர்க்குத் 'தாயம்மை' என்ற தூய தமிழ்ப் பெயர் பிடிக்காமல் அதனை 'ஜெகதாம்பாள்' என்று அழைப்பதைக் காண்கிருேம். 'தாயம்மை' என்ற தூய இனிய செந்தமிழ்ப் பெயர் ஒலிப்பதற்கும் கேட்பதற்கும் எத்துணை இன்பந் தருவதா யிருக்கிறது!"

என்று திருமண இதழ்களில் நடைபெற்ற நிகழ்வுகளை யொன்றும் அறியாமலே பேசினேன். அதனைக் கேட்ட மணப் பெண்ணின் தந்தை யாரும் பெரிய தந்தையாரும் யாங்கள் சொல்லிக் கொடுத்துப் பேசுவது போல் பேசிவிட்டீர்களே என்று என்னைத் தனியே கூப்பிட்டுச் சொல்லி வியப்புற்றனர்.

சென்னைப் பச்சையப்பன் மகளிர் கலைக் கல்லூரியில் தமிழ் விரிவுரை யாளராகப் பணியாற்றும் திருவாட்டி தாயம்மை (எம். ஏ.) என்பவர் திருப்பெயரும், பச்சையப்பன் ஆடவர் கலைக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரியும் அவர்தம் கணவனுர் அருணசலம் (எம். ஏ.) என்பவர் 'அறவாணன்' என மாற்றி வழங்கப் பெறும் திருப் பெயரும் கேட்பதற்கு எத்துணை இன்பந் தருவனவாக வுள்ளன!

வ. சு.

அனிச்ச அடி—நாடகம்

ஆய்வுரை

[‘தமிழண்ணல்’ டாக்டர் இராம. பெரியகருப்பன்,

தமிழ்த்துறை, மதுரைப் பல்கலைக் கழகம்.]

1. அனிச்சப் பூ

அனிச்சம் ஓர் அரிய மென்மைமிக்க மலர். மலர்கள் எல்லாம் மென்மையுடையன; அம் மலர்களனைத்திலும் மென்மைமிக்கது அனிச்சமலர். அதனால்தான் அம் மலர் திருவள்ளுவரின் உள்ளத்தைக் கவர்ந்தது போலும். சங்கத் தொகை நூல்களில் ஈரிடங்களில்மட்டுமே மலரோடு மலராக வைத்துத் தொடுக்கப்பட்ட இவ் வனிச்சப் பூ* திருவள்ளுவ ரால் நான்கு இடங்களில் அதன் இயல்பு தெரிவித்தோதப்படு கின்றது.†

திருவள்ளுவர் ‘மோப்பக் குழையும் அனிச்சம்’ என்று முகர்ந்துழியே வாடிவிடும் அதன் இயல்பை உவமைப்படுத் தினர். பெண்மையின் மென்மையைப் புனைவதற்கு அனிச் சத்தை நன்கு பயன்படுத்திக்கொண்டார்.

‘மலரினும் மெல்லிது காமம்’. தமிழ் அகத்திணை இலக் கியம் கற்றோர் இதனை நன்குணர்வர். பெண்ணின் உள்ளக் கருத்து ‘முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல்’ அடங்கி யிருக்கும். ‘பசுமட் கலத்துள் பெய்த நீர் புறம்பொசிந்து காட்டு மாறுபோலத்’ தலைவி தன் உள்ளத்துணர்வுகளை மெய்ப்பாடு களால் புலப்படுத்துவாளேயன்றி, எளிதில் வாய்விட்டுக் கூற மாட்டாள். இந்நாளைய இலக்கியமோ, பாலுணர்வையே மையங்கொண்ட மேலைநாட்டிலக்கியங்களைப் பின்பற்றிக் காம உணர்வைக் கல்லினும் வலிதாக்கிக் காட்டிப் புனைகின்றன. பெண்ணேயாளனின் உடலழிவுபோல இற்றை இலக்கியம் ஒரு பாற் கரைந்து கொண்டிருக்கிறது. இந்நிலை ஏனெனில், ‘உண்மையை உள்ளவாறே’ படம் பிடிப்பதாய், இன்றைய படைப்பாளிகள் அடம் பேசுகின்றனர். இவ்வாறு இலக்கியம் திசைதிரும்பித் தடுமாறியுள்ள இவ்வேளையில், கவிஞர்

---

* *அரிநீர் அவில்நீலம், அல்லி, அனிச்சம்...’’ கலி. 91—1 ‘‘ஒண் செங் காந்தள், ஆம்பல், அனிச்சம்...’’ குறிஞ்சிப்பாட்டு 62.*

† குறள்: *90, 1111, 1115, 1120.*

ஆ. பழநி பெண்மைப் பண்பிற்கு அரண் செய்து காப்பாற்றும் அரியதொரு நாடகக் காப்பியத்தைப் படைத்துத் தந்துள்ளமை பெரிதும் வரவேற்கத் தக்கதாகும்.

ஒரு மொழியில் ஓரிலக்கியம் நிலைபெறுவதற்கு இரண்டு காரணங்கள் உள. ஒன்று: பிற, பல நூல்கள் உளவாயிருக்கவும் இந்நூற்கண் அவற்றிலில்லாத புதுமை ஏதும் உளதா? அவற்றினும் ஓரளவு மேம்பட்ட, வளர்ச்சி நிலையுளதென்று சுட்டிக்காட்டத் தக்கனவாய் ஓரிரு பகுதிகளேனும் உளவா? தனித்தன்மையுளதா? என்பது. இரண்டு: ஓர் இலக்கியத்தில் இஃது இலையேல் அதனலாம் பயன் ஒன்று குறையும் என்று கூறுமளவு, ஏதும் பயனுண்டா? என்பது.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களின் நினைவாகச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் வெளியிடும், கவிஞர் பழநி வடித்துத் தந்துள்ள 'அனிச்சஅடி' என்ற இந்நாடகக் காப்பியம் இத்தனித்தன்மைப் பண்புகளும் இன்றியமையாப் பயனும் ஒருங்கே அமைந்ததாகும்.

2. படிமக் காட்சி

உலக இலக்கியங்களனைத்தும் சில பொதுப் பண்புகளை உடையன. அவற்றுள் உவமை, உருவகம் முதலிய சொற் சித்திரங்களால் ஆகும் உருக்காட்சியும் (Imagery), நுண்கருத்துகளைப் பருப்பொருட் குறியீடுகளால் புலனுக்க முயலும் படிமக் காட்சியும் (Symbolism), அரிய தத்துவக் கருத்துகளைக் கதை வடிவில் எளிமைப்படுத்தித் தரும் பழம் மரபுக் கதையாட்சியும் (Myths) என்பன குறிப்பிடத்தக்கனவாகும். சென்ற நூற்றாண்டு முதலே, மேலைநாட்டுத் திறனய்வாளர்கள் இவ் உத்திகளில் பேரார்வம் காட்டி வருகின்றனர்.

இவற்றுள் படிமக்காட்சிப் படைப்பில் சமயநூல்களும் புராண நூல்களும் பெரிதும் ஈடுபாடு காட்டியுள்ளன தமிழில். இந்நோக்கில் இலக்கிய ஆய்வு மேற்கொள்வார் பெரிதும் இன்பங் காண்பர். சங்க இலக்கியத்தில் 'முல்லை' மலர் அதன் வெண்மை, தூய்மை, சீர்மையாகியவற்றால் 'நல்லியல்பு', 'கற்பு' என்ற நுண்கருத்துகளை விளக்கும் படிவம் (Symbol) ஆகியதை நினைவு கூர்க. இங்ஙனம் ஆராய்ந்தால் சங்க இலக்கியமே படிமக்காட்சிக் களஞ்சியமாய்த் தோன்றி நம்மை மகிழ்விக்கும்.

திருத்தக்கதேவர் 'சீவகனை'க் கலைபல நிரம்பிய 'ஆன்மா' வின் குறியீடாக்கிப் படைத்துள்ள திறமும்; சேக்கிழார் பெரு

மான் தடுத்தாட் கொள்ளப்பட்டவராகிய 'சுந்தரரை', ஏனைய அனைத்துயிர்கட்கும், பக்குவ நிலையடைந்த நாயன்மாரனைவர்க்கும் - ஓர் எடுத்துக்காட்டாய்ப் படைத்துள்ள திறமும் அறிந்து கற்கப்பெறின், அங்ஙனம் கற்பார்தம் மெய்யுணர்வு பிறரினும் மேம்பட்டு விளங்கும் என்பதுறுதி.

ஈட்சு (W. B. Yeats) என்ற ஆங்கிலப் பெரும்புலவர், இப் படிமப் படைப்பையே குறியாகக்கொண்டு பாக்கள் பல புனைந்தவர். இதன் சிறப்பினையும் அவர் நன்கு விளக்கியுள்ளார். கண்ணெதிரே காணும் உலகைக் காணாப் பொருளுக்குக் குறியீடாகப் பயன்படுத்திக் கொள்வதே இவ் வுத்தியாகும். கற்பனையானவற்றை விளக்க முடியாதவற்றை நுண்கருத்துகளை ஒலி, வண்ணம், உருவம்போல ஐம்புலன்களுக்குப் புலனாகும் பொருள்களில் வைத்து, நாம் காணுதல் கூடும். குழல் ஒலியில் மழலைப் பேச்சையும் பசுமை வண்ணத்தில் செழிப்பையும் வைத்துணர்கிறோம் அன்றோ? நேரே ஒன்றை விளக்காமல் கருத்துத் தொடர்பாலும் (Association of Thought) கருத்தமைவாலும் (Suggestion) புலனாமாறு விளக்க முயல்வது கலைக்குச் சிறப்பிடம் தருகிறது. 'உண்மையான கலை என்பது நவில்தொறும் நூல்நயமாய் வெளிப்படும் இயல்பும் குறியீடாய் அமைந்திலங்குவதுமேயாகும்' என்பார் ஈட்சு பெருமகனார்.

திருவள்ளுவர், தலைவன் தலைவியின் நலம் புனைந்துரைக்குமிடத்தில், பெண்மையுடன் அனிச்சமலரை ஒப்பிட்டுக் காட்டினார்.

> "நன்னீரை வாழி அனிச்சமே! நின்னினும்
> மென்னீரள் யாம்வீழ் பவள்"

"அனிச்சமே! நீ பூக்கள் எல்லாவற்றினும் மென்மை பொருந்திய இயல்புடையாய். அங்ஙனமாயினும் எம்மால் விரும்பப்பட்டவள் நின்னினும் மென்மைமிக்க இயல்புடையவள் கண்டாய்!" எனத் தலைமகன் கூறுமிடத்து மகளிரின் மென்மை நன்கு புலப்படுத்தப்படுகின்றது. இவண், "அதுபொழுது உற்றறிந்தாளுகலின் ஊற்றினிமையையே பாராட்டினான்" எனப் பரிமேலழகர் உடல் மென்மையையே சிறப்பாக எடுத்தோதினார். எனினும், இது மகளிரின் உளமென்மையையும் உளங்கொண்டதே என்பதில் ஐயமில்லை.

இக்காப்பியத் தலைமகனும் அருளாழி தன் உள்ளங்கவர்ந்தாளாகிய அனிச்சவடியை. உளமாரக் காதலித்தான்; அவளும் அவனை, ஆருயிர்க்கு நிகராக நேசித்தாள். எனினும், இரு

வரது அன்பும் அரும்பாகவே நின்றது. கடமை வாழ்வென்ற இருள் சூழ்ந்த வானம் காதலுணர்வென்ற அரும்பினை மலர விடவில்லை. கடைசியாகக் கடமை முடிந்தது; வானம் புலர்ந்தது; ஆனால், அரும்போ அதற்குள் கருகி உதிர்ந்துவிட்டது. ஒரு வேளை அனிச்சவடி இறுதியில் சாவாமல் இருந்து, ''பெண் கொலை'' புரியக் காரணமாயிருந்த மிஞிலியைக் கொன்று அருளாழி தனது வஞ்சினத்தை முடித்து வந்ததற்பின் அவனுக்கு மாலையிட்டிருந்தால் - இருவரும் 'வண்டொடு புக்க மண வாய்த் தென்றலில்' வயமிழந்திருக்க அருளாழி அனிச்சவடியை நலம்புனைந்துரைத்திருந்தால்,

> "நன்னீரை வாழி அனிச்சமே! நின்னினும்
> மென்னீரள் யாம்வீழ் பவள்!"

என்ற குறளையே எடுத்துரைத்து மகிழ்ந்திருப்பான். முல்லை, குறிஞ்சி முதலிய மலர்களையெல்லாம் படிமப் பொருளாக்கிய சங்க இலக்கியம், அனிச்சத்தைப் புனையவில்லை. திருவள்ளுவர் முதன் முதலாக அனிச்சத்தைப் பெண்மையின் மென்மையோடு ஒப்பிட்டார். பிற்கால இலக்கியங்கள் பலவும் இக்கருத்துத் தொடர்பைப் பேணின. இன்று, இத்தொடர்பால், பெண் கொலை புரிந்து பழிக்கு ஆளாகிய நன்னனைப்பற்றிய இந் நாடகக் காப்பியத்தில், அனிச்சம் பெண்மையின் பெருமையை உணர்த்தும் 'படிம'மாக வார்க்கப்பெற்றுளது.

இந்நாடகத் தலைவி பெயராலும், வாழ்வாலும், மறைவாலும் அனிச்சமே ஆயினள். மகளிரின் மென்மைக்கு அவள் ஓர் எல்லை; பண்புக்கு அவள் ஒரு மேல்வரிச் சட்டம்; தன்னிகரில்லாத் தலைவி. மோப்பக் குழையும் அனிச்சம்போல இவளும் முகரப்படு முன்பே வாடி உதிர்ந்து விட்டாள்.

3. அவலம் அவலம் அவலம் :

இந்நாடகம் பல்வேறு உத்திகளும் பாங்குறக் கொண்டதாக அமைந்து, கற்போர்க்கு இன்பந்தரவல்லதாயுளது. ஆசிரியப்பா நடையால் ஆற்றெழுக்குப்போல் கருத்தை விரித்துரைப்பதாலும், திருக்குறளையும் பழமொழிகளையும் எடுத்தாளுந் திறத்தாலும், குறிப்புப் பொருளும் உள்ளுறையும் இரட்டுற மொழிதலும், உவமைச் சிறப்பும் இயற்கைப் புனைவும் இன்ன பிறவும் அமைந்துள்ளமையாலும் நாட்டுப்பற்றும் மொழிப் பற்றும் நனிசிறக்க எடுத்தோதுவதாலும் இதனை மனோன்மணீயத்தின் வழிப்பட்டது என்று கூறலாம். எனினும், அதனின் வேறாய்த் தனக்கெனத் தனிப்பண்புகள் பலவும் கொண்டு திகழ்

வதனுல், இதனைப் படிக்குங்கால் 'மற்ருென்றின் சாயல் படிந்தது' என்ற எண்ணமே நமக்குத் தோன்றுவதில்லை.

மனோன்மணீயக் கதை பாண்டியன், சேரன் வரலாற்றுக் கதைபோலக் கற்பனையாகப் புனையப்பெற்ற, மொழிபெயர்ப் பாகும். இக்காப்பியக் கதையோ தமிழர் வரலாற்று வழிப் பட்டது. 'பெண்கொலை புரிந்த நன்னன்' என வழிவழியாகக் கூறப்பட்டுவரும் பழங்கதை ஒன்றைத் தன் கருவாகக் கொண்டது. சிக்கல் பல கொண்டதால் மனோன்மணீயக் கதை நீண்டது. இதன்கண் கதையும் குறைவு; சிக்கல்களும் அத்துணை இல. மனோன்மணீய ஆசிரியருக்குச் சைவசித்தாந்தக் கருத்துகளை உட்பொருளாக வைத்து உணர்த்தும் நோக்க முண்டு; அனிச்சவடி ஆசிரியருக்கோ நன்னனும் பிற தமிழ் மன்னர்களைப்போல நற்பண்புகளுடையவனே என்று நிலை நாட்டுவதும் பெண்மையின் பெருமையை எடுத்துணர்த்து வதுமே நோக்கமாகும். முன்னதன்கண் சிவகாமி சிதம்பரன் பற்றிய கிளைக்கதையுண்டு; பின்னதன்கண் கண்ணகி பேகன் கிளைக்கதையுண்டு. முன்னதில் நாங்கூழ்ப்புழுவும் பாட்டுப் பொருளாவதுபோல் பின்னதில் ஆலஞ்சருகும் பாட்டுப் பொரு ளாகின்றது என்ருலும் 'தம்மின் தம் மக்கள் அறிவுடைய ராதல்' போல, மனோன்மணீயத்தின் வழிப்பட்ட 'வாழையடி வாழையாக'—வளர்ச்சி நிலைகாட்டி விளங்குகிறது இந்நாடகக் காப்பியம்.

இதன்கண் எண்சுவைகளும் ஆங்காங்கு அமைந்துள்ளன வெனினும், 'அவலம்' ஒன்றே முதலிலிருந்து இறுதிவரை ஊடுருவி நிற்கிறது. நறவுப் பட்டினத்தில் நிகழும் நன்னனின் வெள்ளணி விழாவைச் சுரும்பார் குழலியும் அருளாழியும் கண்டு மகிழும்போதும், கணியன்கீரன் ஆற்றின் இயற்கையழகில் ஈடுபட்டுப் பாடும்போதும் மருட்கைச் சுவை தோன்றுகிறது.

வெள்ளணிவிழாத் தமிழிசைக்கண், சிலப்பதிகார வரிப் பாடல்களை ஒத்த நடையில் பல அகத்துறைப் பாடல்களைக் கவிஞர் புனைந்து தந்துள்ளார். 'தோழி கையுறை மறுத்தது', 'கழற்றெதிர்மறை', 'இற்செறிக்கப்பட்ட தலைமகள் தன் நெஞ்சிற்குக் கூறியது', 'தலைவி இயற்பட மொழிந்தது', 'தோழி அறத்தொடுநின்றது' போன்ற துறைகளில் அமைந் தவை உவகைச்சுவை யூட்டுவனவாகும். கவிஞர் நாடகக் கதை யினுள் இவ் வுவகைச் சுவையினைப் புகுத்துவது, அதன் 'அனிச்சப் பண்பைக்' கெடுக்கும்' என்றறிந்து, அங்கு அதனைக் கோடிட்டுக் காட்டுவதோடு விடுத்து, இவண் இசையரங்கப்

பாடல்களில் விரித்துரைக்கின்ருர். பிசிர் தோன்ருவாறு பண் இசைப்பதை,

"ஒடுங்கிய இசையிலும் உச்சத் துயிர்ப்பினும்
நடுங்காக் குரலின் நலத்தை என்சொல" (பக்கம் 17)

என இவரே பாராட்டுவர். காப்பியமும் பிசிர் தோன்ருக் குரலிசைபோல 'ஒருமை' உடையதாயிருக்கவேண்டும். அவல நாடகத்தில் உவகைச் சுவைக்கு அளவான இடம் நல்க விரும்பிய ஆசிரியர், அதற்குக் கதையினைக் காட்டிலும் இசை யரங்கினைப் பொருந்திய இடமாய்க் கொண்டது போற்றுதற் குரியதாகும். பிறர் ஒருவராயின், அனிச்சவடியும் அருளாழியும் தனித்திருந்த பல இடங்களில்—கணியன் கீரனர் இல்லம், நறவுப்பட்டினச்சாலை, கடற்கரை, கடற்பயணம், பரணர் இல்லம் போன்றவற்றில் உவகைச் சுவைக்கு நல்ல வாய்ப்புண்டு என்று கருதிக் காப்பிய ஒருமை பற்றிச் சிறிதும் கவலையுருது, கவிதை புனைந்திருப்பர்.

பவளத்தீவில் வேங்கைமுகன் மைந்தனுகிய கோட்புலி என்பான் அனிச்சவடியை வலிதிற் பற்ற முயலும்போது இளிவ ரலின் சுவையை அறிகின்ரேம். அருளாழி மனைவியைப் பறித்த வர்களை வஞ்சம் தீர்க்கச் சூளுரை கூறும்போதும், நார்முடிச் சேரலின் எதிரே நாட்டுப் பற்றுடன் அவன் ஆற்றும் உரை யிலும் பெருமிதம் தலை எடுக்கின்றது.

ஆய் எயினனின் முதுமை காரணமாக, அவனைப் புன் ஞட்டுப் போருக்கனுப்ப நார்முடிச்சேரல் தயங்கும்பொழுது அவன் பகைவரைப் பழிவாங்க 'வீரருள் ஒருவனுகவேனும் வெல்களம் புகவேண்டும்' என்று வேண்டுமிடத்தும், இன்றேல் 'அயிரைமலையின் அணிமுடி ஏறி, உயிரை விடுவதாக' என்று உரைக்குமிடத்தும் வெருளிச்சுவை வெளிப்படுகின்றது. குழலி, மாவின் "பசுங்காய்" தின்றவிடத்தும் மதங்கொண்ட யானையால் மாமரக்கா அழியும்போது மகிழ்ச்சி வெறிகொண்ட அருளாழி மத வெறி கொண்ட யானைமுன் ஓடி, அதனல் தூக்கி எறியப்படும் போதும் அச்சச்சுவை தலைகாட்டுகின்றது. செங்குட்டுவ மன்னர் துறவி வேடமிட்டு வந்தபொழுது, அவரை மிஞிலியின் ஒற்றனே எண்றெண்ணிய அனிச்சவடி பொய்கூற, அப்பொய்யை வெளிப்படுத்திய குட்டுவன் "என்னை மறைத்தல் இயலுமோ? இடையில் மின்னை மறைத்த மெல்லியற்பாவாய்:" என்னும் போது நகைச்சுவை தோன்றுகிறது. எனினும் நூல் முழுதும் அவலத்தையே 'உயிர்ப்புச் சுவை'யாக்கி, உணர்வுக்கு விருந்தளிக்கும் காப்பியம் இது. இதன்கண் முப்பேரவலங்கள்

உள: முதல் அவலம் எயினன் குடும்பமே தீயூழுக்கு இரையாகியமையாகும். இரண்டாவது அவலம் தீவினை காரணமாகப் பெண் கொலை புரிந்து பழி தேடிக்கொண்ட நன்னனும் அவற்குத் துணை நின்ற மிஞிலியும் நாட்டாட்சியுடன் புகழையும் இழந்து பொன்றும் அவலமாகும். மூன்ருவது அவலம் அருளாழி—அனிச்சவடி காதல், ''நிலத்தினும் பெரிதாய், வானினும் உயர்ந்ததாய், நீரினும் ஆரளவிலதாய்'' இருந்தும் இறுதி வரை நிறைவேருமற் போயினமையாகும். இவை ஒன்றினுல் ஒன்று விளைந்தவை; ஒன்றினென்று மீக்கூர்ந்து நிற்பவை. எனவே, இவற்றுள் தலையாயது எது, எனக் காண்பது எளிதான செயலன்று. இக்காரணத்தால் இந்நூலில் இடம்பெறும் அனைத்துமே அவலம் நோக்கியனவாய் அல்லது அவலத்திற்குத் துணை நிற்பனவாய் அமைந்துவிடக் காண்கின்ருேம்.

4. ஆய் எயினனின் குடும்ப அவலம் :

ஒருவகையாக நோக்கினுல், இக் காப்பியக் கதை ஆய் எயினனின் குடும்பமே அழிவுற்றமையைத் தொடக்க முதல் முடிவுவரை கூறுகிறது எனலாம். முதற்களத்தில் எயினனின் மகள் சுரும்பார் குழலி கருக்கொண்ட மகிழ்வுச் செய்தியில் கதை தொடங்குகிறது. குழலியும் அவள் கணவன் அருளாழியும் இல்லறத்தை மிக இனிதாக மேற்கொண்டுவரும் செய்தி விளக்கப்படுகிறது. ஆனல், முதல் அங்கம் இறுதிக் களத்தில், குழலி மறைவெய்த, அருளன் அவலத்தின் எல்லையில் நிற்கின்ருன். 'கோட்டை இடிந்து குறுமணலாகி'க் கிடக்கிறது. இதன்கண் 'முரண்' சுவை அமைந்து அம் முதல் அங்கத்தினையே நாடகப் பண்பு மிக்கதாகக் காட்டுகின்றது.

மகள் குழலி தாயாகப் போவதையும் தானும் தன் கணவனும் பாட்டியும் பாட்டனும் ஆகப்போவதையும் அறிந்து அணிவளை, இன்பக் கண்ணீர் உகுக்கின்ருள். பரணர் பெருமான் அங்கு வந்தவர் இதை யறியாமல், ''கையா றென்னை ? கண்களேன் பனித்தல் ?

> ''அன்னுய் அணிவளை ! அவலர் என்னை ?
> ஒன்னர் தந்த உறுதுயர் உண்டுகொல் ?'' (பக்கம்—8, 9.)

என்று கேட்கும்போது நம் நெஞ்சம் 'ஏன் இவ்வாறு கேட்டார் ?' எனத் துணுக்குறுகின்றது. நறவுப்பட்டினம் சென்றதும் குழலி, ''கண்ணெனக் கருதும் தந்தையின் உள்ளம் புண்ணெனுமாறு'' போந்ததையே நினைவு கூர்கின்ருள். அரு

ளாழி அங்குப் பெண்கள் இட்டு வைத்திருந்த கோலங்களின் அழகைக் கண்டு,

> "செல்வாரை எல்லாம் சிறைசெயும் தரையில்
> நல்லார் இட்ட நன்னிறக் கோலம்" (ப—15).

என்று, தீக்குறியாகப் பேசுகின்றான். குழலி, தனக்கு அழிவு வரக் காரணமாக விருக்கும் ஆற்றினைக் குறிப்புமொழி அமையப் பாராட்டிப் பாடுகின்றாள். இவையெல்லாம் 'நாடகக் குறிப்பு மொழி'களாய் (Dramatic Irony) அமைந்து பின்னர் வரும் பேரவலத்தினை முன்னரே மறைமுகமாக அறிவுறுத்தி நிற்கின்றன.

நார்முடிச்சேரலை வென்று பூழிநாட்டைக் கைப்பற்றிய நன்னனை இசையரங்கிற் புகழ்ந்து பாடிய பாடலைக் கேட்டதும் அருளாழி கொதித்தெழுகின்றான். "இசையரங்கா இது? ஏதிலார்ப் பழிக்கும் வசையரங்கு", என்று கூவுகின்றான். இதனைக் கண்ட குழலி பதறிப்போய், தம்மை யாரென வெளிப் படுத்திக் கொண்டால் 'வெருகின் கையில் வீழ்ந்த கிளி யாவோம்' என்று கடிகின்றாள், 'கலத்தொடு கவிழ்ந்த பால் எனக் கழிதல்' நன்றோ என முறையிடுகின்றாள்; 'மீளா அவலம்' மேவுமே என்கின்றாள். இதனைக் கேட்டுத் தன் தவற்றை யுணர்ந்த அருளாழி, 'நல்லூழ் வயத்தால் தான் கூவியதை யாரும் கேட்டிலர்' என்றும் 'அல்லூழ் ஆயின் கருதவும் அஞ்சுவென்' என்றும் கூறி அமைதியுறுகின்றான். ஆனால், இதற்கு நேர்முரணாக அடுத்த காட்சியிலேயே, குழலி யாற்றிற்கு நீராடச் சென்ற விடத்தில் மாங்காயைத் தின்று, சிறைப்பட்டுத் தான் அச்சுறுத்திய அனைத்தையும் தானே விளை விப்பவள் ஆகின்றாள். 'ஊழின் வலிமை இருந்தவாறு என்னே?' என்று நாமும் வியக்கின்றோம். இவ்விடத்தில் ஆசிரியரின் நாடகவுத்தி பாராட்டத்தக்க வகையில் அமைந் துள்ளமையைக் காண்கின்றோம்.

வெள்ளணி விழாக் காணவந்த இடத்தில் மனைவியைப் பறிகொடுத்து அருளாழி நிற்கின்ற நிலை, மதுரையில் கண வனைப் பறி கொடுத்துக் கண்ணகி அவலமுற்று நிற்கின்ற நிலை யோடு ஒப்பிடத்தக்கதாகும்.

அடுத்து, எயினன் வயது முதிர்ந்த நிலையிலும் புன்னாட் டார்க்குத் துணையாகச் சென்று நன்னன் படையை அழித்துப் பழிதீர்த்துக்கொள்ள விழைகின்றான். நார்முடிச் சேரல் எவ்வளவு தடுத்தும் கேட்டானல்லன். போருக்குச் சென்ற

எயினனை நினைந்து அவன் மனைவி அணிவளை அலமருகின்ருள். இந்நிலையில் அவள் பரணரிடம் ஆறுதல் பெறச் செல்லுங் காலை, புலவர் பெருமான், 'கணவனைப் பிரிந்து வாடும் கண்ணகி கதையைப்' பாடக் கேட்கின்ருள். புலவர்களின் அறிவுரையை ஏற்றுப் பேகன் கண்ணகியிடம் செல்கின்ருன். கண்ணகி பேகன் வாழ்வு மீண்டும் மலர்ந்ததாகக் கதை முடிகிறது. அதுபோலத் தன் கணவனும் போரில் வெற்றி பெற்று மீண்டு தன்னிடம் வருவாஞ என்று அணிவளை ஆவலோடு கேட்கின்ருள். பெண்மையின் சிறப்பறியாது கொன்று பழி தேடிக்கொண்ட நன்னனின் தலைமைக் கதைக்கு, பெண்மைக்கு இழைத்த தவற்றினைச் சான்ருேர்கள் சுட்டிக்காட்டத் திருத்திக் கொண்ட பேகனின் வரலாருகிய இக் கிளைக்கதை முரண்சுவை பட அமைந்து, முன்னதன் கொடுமையைத் தெற்றெனப் புலனுக்க உதவுகின்றது. இதுவும் சிறந்த நாடகவுத்தியாகும்.

அணிவளை, பரணரிடம் தான் கண்ட கனவொன்றைக் கூறுகின்ருள்: "ஒரு முல்லைக்கொடி முழுவதும் பூத்துக் குலுங்கியது. சுரும்புகள் மொய்க்கும் வேளையில் வாளால் அக்கொடி முதலோடும் வெட்டப்பட்டது. முடிவில் அக்கொடி, புதரோடும் சேர்ந்து எரியுண்டது". இக் கனவினைக் கேட்ட பரணர் வினை விளை காலமே இத் தீக்கனுக் கண்டது என்று ஓர்ந்தாராயினும், அதனை வெளிப்படக் கூருமல், 'அழாதே அங்ஙனம் நிகழாதென்றே கருதுகின்றேன்' என்று ஆறுதல் கூற முற்படுகின்ருர்.

அணிவளையின் கனவு போலவே யாவும் முடிவுற்றன. எயினன் புன்ஞட்டுப் போரின் மாண்டனன். அச் செய்தியைக் கேட்ட அணிவளையும் ஆவி ஒடுங்கினுள். "பிணிவளை நீக்காது பெய்ம்மலர் களையாது, மணவணி ஒழியாது மங்கலஞ் சிதையாது" அணிவளை உயிர் துறக்கின்ருள். இங்ஙனம் காப்பியத்தின் முற்பாதி முழுவதும் எயினன் குடும்பமே அழிவுற்ற பேரவலத்தினைக் கொண்டுள்ளது. பிற்பாதியும் இவ் வவலத்திற்குக் காரணமாயிருந்தவர்கள் பழிதீர்க்க முயலும் நிகழ்ச்சிகளின் தொகுப்பேயாகும்.

5. நன்னனின் பழியால் விளைந்த அவலம் :

"மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற்று ஒன்பது களிற்ருெடு அவள்நிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்

பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇயரோ..." (குறு. 292)

என்ற பரணர் பாடலே இக் கதைக்குக் கரு நல்கியது. புனல் தரு 'பசுங்காய்' என்றமையால், வயாநோய் உடையவள் என்றும், புளிப்புச் சுவையுடைய மாங்காயை விடமாட்டாது உண்டனள் என்றும் இக் கவிஞர் கற்பனை செய்துள்ளமை அவரது மதிநுட்பத்தைக் காட்டுகிறது. பிற்கால நூல்கள் பலவும் 'மாங்கனியை' உண்டதற்காகக் கொலை செய்யப்பட்ட தாகவே கூறுகின்றன. 'பெண் கொலை' புரிந்தமையால் நன்னனை மட்டுமன்றி நன்னன் கால்வழியினரையும் தமிழ்ப் புலவர் புறக்கணித்ததாக எண்ணவும் இடமுளது*. பேராசிரியர் அ. கி. பரந்தாமனர் அவர்கள், "அற்புத மாங் கனியை அறியாது தின்ற சின்னஞ்சிறு பெண்ணைக் கொலை செய்யுமாறு கட்டளையிட்ட நன்னன் என்ற மன்னனும் அக் காலத்தில் இருந்தான். ஆனால், அக் கொடியோனைக் கவி ஞர்கள் தீ நன்னன் என்றே குறிப்பிட்டு இகழ்ந்தார்கள். அவன் ஒருவனைத் தவிரப் பெரும்பாலான பண்டைத் தமிழக மன்னர்கள் பொதுமக்கள் பாராட்டக் கூடிய சிறப்போடும், கடவுட் கூறுடையவர்கள் என்று எண்ணக்கூடிய மதிப்புடனும் சிறந்து விளங்கினர்கள்", என்று குறிப்பிடக் காண்கிறோம் †. இந் நாடகம் இப் பொதுக்கருத்துக்கு மாறாக, நன்னனையும் பிற தமிழ் மன்னர்களைப்போல நல்லவனாகவே காட்ட முயல் கிறது. சங்க இலக்கியத்திலும் வேறு யாண்டும் நன்னனைத் தீயோனாகக் கூறவில்லை என்பது அறியற்பாலது. அவனது பிறந்தநாள் விழாச் சிறப்பை 'மதுரைக்காஞ்சி' எடுத்துரைக் கின்றது ‡. 'வினைவிளை காலமாதலின் சினையலர் வேம்பன் தேராளுகி'க் கோவலனைக் கொல்லக் கட்டளை இட்டது போலவே, ஊழ்வினை வயத்தால் நன்னனும் கொலைப் பழிக்கு ஆளாகின்றான் என ஆசிரியர் கற்பனை செய்துள்ளார்.

நன்னனின் படைத் தலைவனாகிய மிஞிலி என்பான் சுரும் பார் குழலியை 'மகட்கொடை' வேண்டி வந்து மறுக்கப்பட் டவன். அதனால் அவட்கு உடன்பிறந்தானைக் கொன்றவன். அவள் தந்தையாகிய எயினனால் போரில் வெற்றி கொள்ளப் பட்டு ஓடிவந்தவன். அடிபட்ட புலிபோல மிஞிலி கறுவு கொண் டுள்ளான். இப்போது பாம்பின் வாயிற் போய் விழும் தேரை

* புறம். 151, அதன் பழைய உரை.

† வரலாற்றுக் கட்டுரைகளும் பிறவும், பக். 96.

‡ அடி : 615—619.

போல், அவனிடம் குழலி அகப்பட்டுக் கொண்டதே வினையாயிற்று. இங்ஙனம் மன்னர்கள், படைத் தலைவர்கள் போன்றோர் தம் வலிமைச் செருக்கால் அழகிய பெண்களை மணக்க ஆசை கொள்வதும் பெண்ணின் பெற்றோரால் மறுக்கப்படுவதும் அதனால் அம்மன்னர்கள் அவள் பிறந்த குடியையும் ஊரையும் அடியோடு அழிக்க முற்படுவதும் அன்றைய கொடுமைகளுள் ஒன்றாகும். புறநானூற்றில் 'மகட்பாற்காஞ்சி' என்ற துறையில் அமைந்தனவாகிய, ஏறத்தாழ இருபது பாடல்கள் இச் சமுதாயச் சீர்கேட்டை எடுத்துக்காட்டும்†. நேரே பகை முடிக்க மாட்டாத மிஞிலி வஞ்சகமாகக் குழலியின் குடியை அழித்துத் தன் நெஞ்சக் கறுவினைத் தீர்த்துக் கொண்டனன். இங்ஙனம் பெண்ணால் ஏற்படும் உலக நிலையாமையை எடுத்துக் காட்டுவதே 'மகட்பாற்காஞ்சி'யாகும். இந்நாடகத்தை முதற்கண் இயக்குவது இப் புறத்துறையே என்பது சாலும்.

'அன்னைக் குலத்தவரை இகழ்ந்து பேசக் கூடாது' என்று அரசவையில் முதற்கண் மிஞிலியைத் தடுக்கும் நன்னன், பிறகு குழலி பொய் கூறினள் என அறிந்தவுடன் மாறி விடுகின்றான். மோசிகீரனார்,

> "கொலையின் நீக்கிக் குழலிநிறை பொன்படு
> சிலையும், ஒன்பதிற் றொன்பது களிறும்,
> தண்டம் செலுத்துதும்; தாவிலாச் சூல்உறு
> பெண்டென் பதனாற் பிழைபொறுத் தருள்க!" (ப—47)

என மன்றாடிக் கேட்டும், கேளானாய்க் கொன்றுவிடக் கட்டளையிட்டமையே அவன் செய்த கொடுமையாகும்.

இக் கொலைபற்றிக் கேள்விப்பட்ட நார்முடிச் சேரலும்,

> "பெண்ணென நோக்காது பேதைமை செய்ய
> நன்னன் எவ்வணம் நயந்தனன்"

என்றும்,

> "நடுநிலை பிறழா நன்னன் குழலிக்குக்
> கெடுநிலை புரிந்தது கேட்டொறும் மருட்கை
> விளைக்குமால்!" (ப—60)

என்றும் ஐயப்பட்டனன். ஊழ்வினை வயத்தாலேயே நன்னன் இந்நிலைக்கு ஆளாயினான்.

---

* புறம். 336—356.

நாடகத்தில் 'தனிமொழி' என்பது, அந்நாடக மாந்தரின் உள்ளுணர்வையும் அடிமனத்தையும் நன்கு எடுத்துக்காட்ட வல்லதாகும். இதனை நன்கு பயன்படுத்திக் கொண்ட பெருமை சேக்சுபியருக்கு உரிய தென்பர்*. தமிழில் மனோன்மணீய ஆசிரியர் இதனைத் திறம்படப் பயன்படுத்தியுள்ளமை நாமறிந்த தாகும். இந் நாடகக் காப்பியத்தும் இவ்வுத்தி நன்கு ஆளப் பட்டுள்ளது. நன்னனை உலகெலாம் பழித்தாலும், அவ னது தனிமொழியை இந்நாடகத்திற் கேட்கும் நாம் அவன் பால் இரக்கமே கொள்கின்றோம். ஊழ்வினையைப் பற்றிப் பேசு கின்றான்; தன் எதிரே குழலி என்னும் அக்குலப் பிறப்பாட்டி தோன்றி, 'கான்றெழு சினத்தீ' முகத்திற் காட்டுவதாகக் கூறு கின்றான்; "அஞ்சுதக உடைத்தால், அவள்முகம் நினையின் நெஞ்சு சுடும்" என்கின்றான். மேலும் தான் கண்ட கன வொன்றையும் அவன் கூறுகின்றான்:

"புனல்யாற்று ஒருகரைப் பொலியுமா மரத்தில்
தினற்குள தீம்பழம் செழுங்கிளை வளைத்துத்
தூங்கக் கண்டனென்; சுவைக்கனி கையால்
வாங்கக் கிளையை வளைக்கக் கனியெலாம்
மனிதத் தலைகளாய் மாறிச் சிரித்தன;
முனிவும் நகையும் முழங்க வார்த்தன;
வடுவெலாம் குழந்தையின் வளர்கரு வாகியும்
கெடுவிலா மலரெலாய் கெழுதசை போலவும்
தேன்றுளி குருதித் துளிகள் போலவும்
வான்பருந் தாகி வண்டுகள் சுழலவும்
திடுக்குற் றெழுதரத் தீர்ந்தது கனவு" (ப—118)

என்று அவன் கூறுவதனால் அவன் மனம் என்ன பாடுபட்டது என்பதை நாம் அறிய முடிகின்றதன்றோ? மேலும் "ஒருத்தி, கண்ணீருக்கு எதிரே திருத்திய வாளும் பயன்படாதென்றும், மிஞிலி கூறியதற்காகக் கூட இக்கொலைத் தண்டம் விதிக்க வில்லை என்றும், 'செப்பருந் தீவினை சேர்ந்ததாலேயே' இக் கொடுமைக்கு ஆளாக நேர்ந்ததென்றும்" வருந்துகின்றான். பின்பு ஓரிடத்தில் அழிவு நெருங்கி வருவதை உணரும்போது, முன்பெல்லாம் வெற்றி குவித்ததற்கு மாறாக இதுபோழ்து தோல்வி சூழ்வதற்குக் காரணம், 'குழலி என்னுமோர் குலப்பிறப் பாட்டியின் அழலுமிழ் விழியின் அடங்கா ஊற்றே' என னைகின்றான். [தொடரும்]

---

* W. H. Hudson, An Introduction to the Study of Literature. p. 103—98.

ஆப்பிரிக்கச் சுற்றுலா

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

(சிலம்பு ௪அ, பரல் ௧, ௹ஆம் பக்கத் தொடர்ச்சி)

7. நேட்டால் கலைக்கழகப் பேச்சு

லெமூரியரே ஆப்பிரிக்கர் :

தென்னாப்பிரிக்காவைத் தேன் ஆப்பிரிக்கா என்னலாம். எங்கும் கரும்புத் தோட்டம் பச்சைப் பசேலென்றிருக்கிறது; இந்நாடு, குன்றும், திட்டுத் திடலுமாயிருக்கிறது. பொன்னும் மணியும் கொழிக்கின்றன. கனி மரங்கள் செழிக்கின்றன. இங்கே 18,000000 மக்கள் இருக்கிறார்கள். இவருள் 45% பட்டணங்களிலும் 55% பட்டிக்காடுகளிலும் வாழ்கிறார்கள், இந்நாட்டின் கிழக்கே அட்லாண்டிக், மேற்கே இந்துக்கடல் அலைமோதிப் பரந்து விரிந்துள்ளன. பழைய குமரிக்கண்டப் (Lemuria) பகுதியே இந்நாடு. ஒரு காலத்தில் தமிழகமும் ஆப்பிரிக்காவும் இணைந்திருந்தன. அந்தக்காலக் குமரிக்கண்ட மக்களே இன்று ஆப்பிரிக்க, நீக்ரோக்கள் என ஆராயலாம். முனைநாடு (Cape Region) ஐந்தில் மூன்று பங்கு, டிரான்ஸ்வால் 25% ஆரஞ்சுரிமை நாடு (Orange Free State) 11%, நேட்டால் 7% உள்ளன. இந்நாடுகளுக்குத் தலை நகரம் பிரிடோரியா, கேப்டவுன் (முனையூர்) சட்டமன்றம்; டர்பான், ஜோஹான்ஸ் பர்கு, ஈஸ்டுலண்டன், போர்டு எலிசபெத்து, பீடர் மாரிட்ஸ்பர்கு முதலியன முதன்மையான பேரூர்கள். பேரூர்களில் வெள்ளை யர் (டட்சர், ஆங்கிலர், ஜெர்மனர், யூதர், ஜபானர், சீனர் தனியுரிமையுடன் மாளிகை கட்டி வாழ்கிறார்கள்.

பண்டர் :

நாட்டுக் கறுப்பர் (Blacks of The Soil) ஃ சூலர் (Zelur), புசுடர் (Bosutar) பொண்டர் (Ponder) செசடர், சுவாலியர் (Swahilis) பண்டர் (Buntur) என்ற பெயரால் காட்டுப்புறங் களில் வாழ்கிறார்கள். பண்டர் என்றால் பழங்குடி மக்கள் என லாம். அவர்கள் இப்போது காலத்திற்கேற்ற கல்வி பெற்று மருத்துவராகவும், சிற்பிகளாகவும், (Engineers) பேராசிரிய ராகவும், பெருந்தொழிலராகவும் முன்னேறுகிறார்கள். அவர் களுக்கெனக் கல்விக்கழகங்கள் ஆங்காங்கே உள்ளன. அவருட்பெரும்பாலோர் கிறித்துவராவர். அவர்கள் பட்டணங் களில் அலுவல் பார்க்கிறார்கள். அவர்களுக்கெனத் தனி விடுதிகள் உண்டு.

நிறவர் ;

பண்டருக்கும் வெள்ளையருக்கும் பிறந்த மக்கள் நிறவர் (Coloured race) எனப்படுகிறார்கள். இவர்களுக்குத் தனியிடம் உண்டு. வெள்ளையருக்கு அடுத்தபடி இவருக்குச் சலுகை யுண்டு.

இந்தியர் :

இந்தியர் (தமிழர், தெலுங்கர், குஜராத்தர். (மார்வாடிகள்) அடுத்தபடியாக ஒதுக்குண்டு வாழ்கிறார்கள்.

13-10-1860-ல் S. S. துரோ (S. S. Thuro) 217 அடி 1970 டன், என்னும் கப்பலில் சென்னையிலிருந்து 300 பேர் கூலிகளாக வந்தனர் துரோ 113 ஆண்டுகளுக்கு முன்னே 16-11-1860-ல் டர்பான் வந்து கூலிகளை இறக்கிச் சென்றது. இம்மாதிரி ஒப்பந்தக் கூலிகள் சென்னை, பீஹார், அயோத்தி, ஆந்திர நாடுகளிலிருந்து வந்து கரும்புத் தோட்டத்தை வளப்படுத்தி னார்கள். மகாத்மா காந்தி காலத்திலிருந்து குஜராத்தியரும், காத்தியவாடிகளும் வந்து வாணிகத்தாற் செழித்தனர். ஏராள மான இஸ்லாமியரும், வந்து குடியேறி வீடு கட்டினர். இவர் களுக்கு ஒட்டுரிமையில்லை. இவர்களை ஒட்ட பெண்ணுட்சிக்கு உரிமையுண்டு. இவர்களும் ஆங்கிலங்கற்று, பலவகை வாணி கத்தால் பிழைக்கிறார்கள். இந்தியருக்கெனக் கல்விக் கழகங்கள் உண்டு. வெள்ளையருடன் இவர்கள் படிக்க முடியாது; இருக்க முடியாது. தமிழர் பெரும்பாலும் நேட்டாலில் வாழ்கின்றனர். வெள்ளையுடன் கறுப்புக்கலப்பது குற்றமாகும். அதற்குக் கடும் தண்டனையுண்டு.

நேட்டால் :

நேட்டால் 1910-முதல் தென்னாப்பிரிக்க ஒன்றியத்தில் (S. A. Union) உள்ளது. இதன் வடக்கே டிரான்ஸவால், சுவாசிலாந்து (Swaziland) தெற்கே கேப்பகம் (Cape Region), கிழக்கே இந்துக்கடல், மேற்கே பாசுடோ லாண்டு (Basutoland) ஆரஞ்சுரிமை நிலம் (Orange free land) உள்ளன. நேட்டால் 35,578 சதுர மைல் பரப்புள்ளது. இந்நில நடுக்குன்றுகள் 2000 முதல் 6000 அடி வரையில் உயர்ந்துள்ளன. மழை 30''; நல்ல வளநாடு. இதன் தலைநகர் பீடர்மாரிட்ஸ்பர்கு; துறை முகம் டர்பானே. இது ஃசூலூர். இங்கேதான் 80% இந்தியர் இருக்கின்றனர், உழைக்கின்றனர். இங்குள்ள வெள்ளையர் ஆங்கிலமே அதிகம் பேசுவர். மற்ற மாகாணங்களில் ஆஃபரி

கான்ஸ் பரவியுள்ளது. இங்கும் அது விரவுகிறது. இங்கே 3,40,235 ஆசிரியர் உண்டு. தந்தமும் நிலக்கரியும், கரும்பும் இங்கே அதிகம்.

நேட்டாலை 1497-ல் வாஸ்கோடகாமா கண்டு டொரா நேட்டாலிஸ் (Terra netalis) என்று பெயரிட்டான்.

டிங்கான் :

பண்டுத்தலைவன் டிங்கான் (Dingan) படை சேர்த்து இங்கே குடியேறிய வெள்ளையருடன் போர்புரிந்து பலரை வெட்டித்தள்ளினன். தானும் இறந்தான்.

திசம்பர் 16ஆம் நாள் டிங்கான் நாளாகக் கொண்டாடப்படுகிறது. இப்போது அதை ஒப்பந்த நாளாகக் (Covenant Day) கருதுகின்றனர். அந்த நாள் நினைவாக பீடர்மாரிடஸ்பர்கு எழுந்தது—இது தியாகிகள் ஊரானது. போயர் போரில் ஆங்கிலர் தோற்று டச்சுக்காரர் வென்றனர்.

டச்சுக்காரர் ஆஃப்ரிகானர் எனப்பட்டனர். இவர்கள் ஆட்சியில் நாடு வளர்ந்தது. ஒப்பந்தக் கூலிகள் குறைந்தனர்.

இந்தியர் நிலைமை :

இந்தியர் இன்றும் ஒதுக்கிடத்திலேதான் வாழ்கிருர்கள். இரு என்ருல் இருக்க, போ என்ருல் போகவேண்டிய நிலைதான் இந்திய முஸ்லிம்கள் பெரிய பெரிய வீடுகளைக் கட்டி வாடகைக்கு விடுகின்றனர். செல்வத்தொழில் நடத்துகின்றனர். குசராத்திகளும் அவ்வாறே. தமிழர் சிறு சிறு தொழில்களாலும், ஊழியத்தாலும் பிழைக்கின்றனர். பிழைப்பு உழைப்பாலே தழைக்கிறது.

இந்தியர் படிக்க இரண்டு கல்லூரிகள் உள்ளன. அவற்றில் ஒன்று சாஸ்திரி கல்லூரி. பண்டுக் கல்லூரி தனித்துள்ளது.

நேட்டால் கழகம் :

நேட்டால் பல்கலைக் கழகம் 50 ஏக்கர் நிலத்தில் பரந்து விரிந்து நிவந்து விளங்குகிறது. இங்கே உயர் கல்வி கற்கலாம்-வெள்ளையரே, இக்கல்லூரியில் பயிர், வாணிகம், மருத்துவம், எஞ்சிநீரின் (சிற்பம்), சட்டம் - போதி - வேதி, செடி—உயிர், உடல் நூல்கள், கணக்கு, ஆங்கிலம், ஆஃப்ரிகான்ஸ், ஆகிய எல்லாம்கற்கலாம். 4,000 மாணவர் படிக்கின்றனர். இந்தியருக்கு இடமில்லை.

ஜான்பாயின்டன் :

இருப்பினும் என் புலமையை அறிந்த சில வெண்புலவர் இங்கிருந்தனர். அவருள் ஜான்பாயின்டன் உயிர்நூற் புலவர் (John Poynton, Animal Biologist, King George Avenue, University of Natal). எனது Yoga for All (எல்லாருக்கும் யோகம்) என்ற நூலைப் போற்றி முன்னுரை யளித்தார். அந்நூல் அங்கே சொக்கழகாக வெளிவந்துலாவுகிறது. இவர் கழகத் தலைவரைக் கலந்துகொண்டு எனக்கு அங்கே பெரிய மன்றத்தில் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்தார் :—பொருள்—யோக—விஞ்ஞானம் (Yoga a Science) இப்புலவர் எனது Revelations of Meikandar, Gospel of Perfect Life முதலிய நூல்களைக் கற்று மகிழ்ந்தார். இருவரும் உயிர் நூல் நுட்பங் களைப்பற்றி உரையாடுவதுண்டு.

இன்னும் சில வெண்புலவருடன் நாங்கள் டர்பானைச்சுற்றினேம். டர்பான் கடல் குளிக்க வசதியானது; அங்கே நீந்திக் குளித்தேன் ; 200 அன்பர் என்னுடன் நீராடி மகிழ்ந்தனர். டர்பானில் அழகிய பூங்காக்கள் உள்ளன ; அவற்றில் அழகழ கான மலர்ப் பொதும்பர்கள் கண்ணைக்கவரும். மணமலர்க ளிடையே உலாவி மகிழ்ந்தோம் ; பிறகு காட்சிசாலைக்குச் சென்று ஆப்பிரிக்கப் பறவையினம், விலங்கினம், கல்லினம், அணிமணியினம், போர்க்கருவிகள், கைத்தொழில்கள், மக்கள் வரலாற்றுக் காட்சி எல்லாம் விரிவாகக் கண்டு பயன்பெற்றேம் ; நூலகங்கள், கல்லூரிகள் எல்லாம் பார்த்துக் கடற்கரையில் வானேங்கிய அடுக்கு மாளிகைகளில் சில நண்பரைக் கண்டு பேசிக் கடற்கரைக்கு வந்து கப்பல்களைக் கண்டோம். கடற் காட்சி கண்ணுக்கு விருந்து. நாட்டில் ஆகும் எல்லாப்பொருள் களும் ஏற்றுமதிக்கு டர்பான் சேரவேண்டும். கடற்கரை நெடுக எத்தனையோ தொழிற்சாலைகள் உள்ளன. எல்லாம் வெள்ளையர் நடத்துவன. ஒரு நீர் வீழ்ச்சி முன் கடவுளின் அருளருவியை நினைத்தோம். டர்பான் வளைகுடாவை அளந்து சுற்றினேம்.

நேட்டால் கழகம் :

இரவு எட்டு மணிக்கு நேட்டால் பல்கலைக் கழகத்திற்கு வந்தோம். வெள்ளைப் புலவரும் மாணவரும் வரவேற்று மன் றேற்றினர். பாயின்டன் தலைமை வகித்தார். ‘‘உலகம் சுற்றிய விஞ்ஞானப் புலமைபெற்ற யோகி’’ என்று என்னை அறிமுகப் படுத்தினர். நான் முக்கால் மணி நேரம் பேசி, பதினைந்து

னிடம் கேள்விகளுக்கு விடை பகர்ந்தேன். கேள்விகளைத் தயா ராக எழுதியே தந்தனர்.

யோக விஞ்ஞானம் :

உலகில் இரண்டு சக்திகள் உள்ளன. ஒன்று ஆத்ம சக்தி; மற்றொன்று இயற்கைத்திறன். ஆத்மசக்தி யோகத்தால் வளரும். அது மனத்தையும், உள்ளத்தையும் பண்படுத்தும். இயற்கைத் திறன் வாழ்விற்கு ஆக்கம் அளிக்கும். உடல் வாழ்வில் நலம் அடையவேண்டிய இன்பங்களுக்கெல்லாம் இயற்கைத்திறன் ஊக்கமளிக்கிறது. இந்த இயற்கைத்திறனை அறிவதுதான் ஸயன்ஸ் (Sio to know) அல்லது விஞ்ஞானம் என்கிறோம். மனித வாழ்விற்கு இன்றியமையாத காற்று, தீ, நீர், மண்வளம், மின்சாரம், ஒளி, ஒலி, எல்லாம் இயற்கைத்திறனின் விளக்கமே. இன்று நாம் காணும் அணுவியல்களெல்லாம் (Atomic Wonders) இயற்கைத் திறனால் ஆவன. ஃபாரடே, மேடம்க்யூரி, ருதர்ஃபோர்டு, டாக்டர் ஹான், காம்ப்டன், சி. வி. இராமன், பி. சி. ரே, ஜே. சி. போஸ் முதலிய விஞ்ஞானிகள் எல்லாம் இயற்கைத்திறனை ஆராய்ந்து புதுமை கண்டனர். அப்புதுமை களால் மின்சக்தி நிலவுகிறது. மின் பொறிகள் பல தொழில் களைச் செய்கின்றன. கப்பல்கள் கடலிற் செல்கின்றன. விசை வண்டிகள் அசைகின்றன. விமானம் விண்ணளாவிப் பறக்கிறது. அப்பாலோ-17 மதிமண்டலத்தில் இறங்குகிறது. மனிதன் மதிமண்டலத்தில் நடக்கிறான். அங்கிருந்து நம்முடன் பேசுகிறான். இந்த அற்புதங்களெல்லாம் இயற்கைத் திறனாலே நடப்பன. மனித மூளை இயற்கை விஞ்ஞானத்தை வானளாவ உயர்த்திவிட்டது.

இருப்பினும் விஞ்ஞான மனிதன் அமைதி பெறவில்லை. உலகில் போர் நிற்கவில்லை. அணுகுண்டினால் உலகமே அழிந்துவிடும் என்ற அச்சம் விஞ்ஞான உலகை நடுக்குகிறது. சிலர் அச்சத்தாலே தற்கொலைபுரிந்து கொள்கிறார்கள். உண்டு, உறங்கி, ஊடிக் கூடி, பணம் தேடி, சேர்த்து மாளிகை கட்டி, சிற்றின்பம் துய்த்தும் மனிதனுக்குள் உள்ள ஒரு நுட்ப மான பசி அடங்கவில்லை. மனிதன் அமைதி காணவில்லை. உலகில் எங்காவது போர்ப்பேய் இரத்த நடம்புரிந்துகொண்டே யிருக்கிறது. இதன் காரணம் என்ன? மனிதன் தனக்குள் உள்ள ஆத்தும சக்தி இன்னொரு சக்தியை அறியவில்லை. அது தான் ஆத்மசக்தி. மனம் ஐம்பொறிகள் வழியே தாவி உலகில் சுற்றச்சுற்ற மனிதன் சக்தியை இழக்கிறான். மனம் அலைந்து அல்லற்படுகிறது. வெளியே செல்லும் மனம் உள்ளடங்கி

ஒருமையில் நின்ருல், அமைதி உண்டாகும். இன்பம் உண்டாகும். இதைத்தான் திருவள்ளுவர்,

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்ருர். இதைத்தான் திருமூலர்,

"உள்ளத் தொருவனே உள்ள உள்ள இன்பம்"

என்ருர்.

அகமும் புறமும் :

வெளியே செல்லும் மனதை உள்ளே திருப்பி, உள்ளே பொங்கும் ஆத்மசத்தி ஊற்றைக் காண்பதே யோகமாகும். தமிழ் முனிவர் அகம், புறம் என்று வாழ்க்கையை இரு கூருகப் பிரித்தனர். புறவாழ்வு விஞ்ஞானத்தால் விரிவாகும். அக வாழ்வு யோகத்தால் உயர்வாகும். ஒரு மரத்திற்கு வேர் போன்றது ஆத்மசத்தி அல்லது யோகசத்தி. அதைத் தியான நீர் ஊற்றி வளர்க்கவேண்டும். ஒரு மரத்திற்கு இலை, பூ, கனி போன்றன இயற்கைத்திறன். வேர் ஆழமாகச் சென்ருல் கிளைகளும், மலர்ந்து கனியும். வேரும், கிளையும் சேர்ந்தாலே மரம் தழைக்கும். இதுதான் யோக விஞ்ஞானம் என்பது ஒரு கட்டிடத்திற்கு அடிப்படை போன்றது ஆத்மஞானம்—மேல்வரிசை போன்றது—விஞ்ஞானம்.

வினு-விடை :

1. கேள்வி : யோகத்திற்கும், சாதாரண வாழ்விற்கும் ஒத்துவருமா?

விடை: யோகமே வாழ்க்கை. வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதுதான் யோகம்.

2. கேள்வி : எங்கள் வாழ்க்கையில் அமைதி காணவில்லையே?

விடை : மனம் அலைவதினுல் அமைதி குறைகிறது. மனமே மனிதன்.

3. கேள்வி : மனம் அலையாது நிறுத்த வழி என்ன ?

விடை : மனத்தை ஒருமைப்படுத்த வேண்டும். வெளியே தாவவிடக் கூடாது.

4. கேள்வி: ஒருமைப்படுத்த வழி என்ன?

விடை: நமது நாட்டத்தை ஏதாவது ஓர் உயர்ந்த பொருளிடத்தில் உய்க்கவேண்டும். காலை, மாலை கதிரவன் முன்னே அமர்ந்து அரைக்கண்ணால் கதிரவனை நோக்கிப் பிறகு கண் மூடி அதே கதிரவன் நம் உள்ளத்தில் அல்லது புருவ நடுவே ஒளிர்வதாகக் கருதித் தியானம் செய்தால் ஒருமையுண்டாகும். பதினைந்து மணித்துளிகள் இவ்வாறு இருந்து பழகினால் தியானம் கைகூடும். சுத்த சத்தி, ஓம் சிவம் என்ற மந்திரத்தை இதயத் துடிப்புடன் செபித்துப் பழகினால் நாளடைவில் இதயத் துடிப்பே மந்திரமாய்விடும். பிறகு நாம் வாயினால் செபிக்க வேண்டியதில்லை. உள்ளத்துடிப்புடன் செபசாதனம் நடந்தால் தியானம் நிலைக்கும். யோகம் சித்தியாகும்.

''ஒன்றினை ஒன்றலே யோகம்; அலைமனத்தை
வென்றிடின் ஒன்றும் வியந்து''

கேள்வி: இந்த யோகம் எங்கள் படிப்பிற்குப் பயனாகுமா?

விடை: மனம் படிவதுதான் படிப்பு. மனம் படிந்து, ஒருமையுடன் கற்றால், நீங்கள் இரண்டாண்டு கற்பதை ஆறு மாதத்தில் கற்றுவிடலாம்.

கேள்வி: திருமணம் புரிந்தவர்கள் யோகம் செய்யலாமா?

விடை: நன்றாகச் செய்யலாம். கணவனும், மனைவியும் குழந்தைகளுடன் கூடக் காலை, மாலை பத்து மணித் துளிகள் அமைதியாக அமர்ந்து உள்ளடங்கியிருக்க வேண்டும். பிறகு எல்லாரும் கடவுள் வணக்கம் பாடவேண்டும். பைபிள், குர்ரான், கீதை, தேவாரம், திருவாசகம், திருக்குறள், யோகசித்தி (Gospel of Perfect Life) இந்நூல்களில் ஒன்றை ஒவ்வொரு நாளும் சில ஏடுகள் படித்து, சிந்தித்து நின்றால், வாழ்க்கை ஒளிபெறும். மனம் தெளிவாகும்.

இந்த விடைகள் அவர்களுக்குப் பெருமகிழ்ச்சி அளித்தன. பாயின்ட்டன் துரை மிகப் பெருமையாக நன்றி கூறி விடையளித்தார். அன்றுமுதல் என் கூட்டத்திற்கு ஏராளமான மாணவர் வந்தனர்.

(தொடரும்)

முத்தமிழ் தந்த முப்பூ

[புலவர் பொ. முனியப்பன்]

நுழைவிடம்

முத்தமிழாம் நம் முத்துத் தமிழ் மருத்துவத்தில் முதன்மை பெற்று விளங்கும் பொருளே 'முப்பூ' என்பது. மூன்று—தமிழ் முத்தமிழ் ஆனதைப் போன்று மூன்று உப்பு சேர்ந்து முப்பூ வானது. இந்த இந்த மருந்துக்கு என்ற வரையறையின்றி எல்லா மருந்துகளுக்கும் சேர்க்கத்தக்க செப்பமுடையது இந்த முப்பூ ஒன்றுதான். உலகில் எம்மருத்துவமும் காணுது, தமிழ் மருத்துவம் கண்ட ஒப்பில் உப்பு இம் முப்பூ.

மூவகை முப்பூ

முப்பூவைப் பற்றிச் சித்தர்கள் பல பெயரிட்டுப் பலவகை யாகக் கூறியுள்ளார்கள். எனினும் அதை மூன்று வகைக்குள் அடக்கலாம். முதலாவது ஓகப் (யோகப்) பயிற்சி செய்பவர் களுக்கும், மாழைப் (உலோகப்) பொருள்களைத் தங்கமாக மாற்றுவதற்கும் உரிய முப்பூ. இரண்டாவது மந்திர வித்தை களுக்குப் பயன்படுவது. மூன்ருவது மருத்துவத்திற் குரியது

முதல்வகை முப்பூ

ஓகப்பயிற்சி செய்பவர்களுக்குரிய இம் முப்பூவைப் பற்றி எந்தச் சித்தரும் வெளிப்படையாகக் கூறுவதில்லை. ஏனென்ருல் இம் முதல்வகை முப்பூவிற்கு மாழைப் பொருள்களை யெல்லாம் தங்கமாக மாற்றும் ஆற்றல் உண்டு. வழலை முப்பூ போன்ற பலவகையான பெயர்களால் இது கூறப்படுகிறது. எனினும் இது செய்யப்படும் முறை எவருக்கும் எளிதில் புரியாது. ஓகப் பயிற்சி செய்பவர்களால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும். இதுபற்றி அகத்தியர் கூறும் அகச் சான்று,

"யாரப்பா கண்டுசெய்வான்? யோகி யானல்
அறிந்துகொண்டு வழலையெடுத் தாடு வானே"

என்றும்,

"ஆடுவான் வழலைதொட்டே யோகி யானல்
அதைவிட்டு மூதேவி அலவா னப்பா
ஓடுவான் நிலத்திலே முளைத்த பூண்டு
ஒவ்வொன்ருய்ப் பார்த்துமன முருகி மாய்வான்

> கூடுவான் கடைசியிலே பிச்சை வாங்கிக்
> குடிப்பதல்லால், நூல்களுக்குக் குற்றஞ் சொல்வான்
> ....''
>
> —அகத்தியர் பின் எண்பது 17, 18.

என்றும் உள்ளது. எனவே, முதல்வகை முப்பூ ஒகியர்களுக் கன்றி மற்றவர்களுக்குக் கிட்டாது.

இரண்டாம் வகை முப்பூ

இரண்டாம் வகை முப்பூ மந்திர வித்தைகளுக்குரியது. மந்திர தந்திரம் செய்பவர்கள் இவ்வகை முப்பூவைப் பயன் படுத்தியிருக்கிருர்கள். இதைச் செய்யும் முறையாவது :

மண்டை ஓடும் - உவர் மண்ணும்

இறந்தவர்களின் தலைமண்டையைக் கொண்டு வந்து சிறுசிறு துண்டுகளாக்க வேண்டும். பின் மகர, கும்ப (தை, மாசி) மாதங்களில் உவர் நிலத்தில் பூக்கும் உழமண்ணைக் கொண்டு வந்து, அதில் நீர்விட்டுக் கரைத்து வடிகட்ட வேண்டும். வடிகட்டிய நீரில் முன்பு உடைத்து வைத்திருக்கும் மண்டைத் துண்டுகளைப் போட்டு நீர் சுண்டக் காய்ச்சி, பின் நல்ல நீர்விட்டு அலம்பி உலரவைக்க வேண்டும்.

சுண்ணும்பு நீர்

அடுத்து, சுண்ணும்புக்கல் கொண்டுவந்து கரைத்துத் தெளிவை இறுத்துக் கொள்ள வேண்டும். பின் நல்லநீர் ஊற்றி உலரவைத்த மண்டைத் துண்டுகளைப் போட்டு வற்றக் காய்ச்சி எடுத்துக் கொண்டு, அத் துண்டுகளை யெல்லாம் கல்வத்தில் இட்டு நன்ருக அரைக்கும்போது முன்பு தெளிய வைத்து இறுத்த நீரை யூற்றி மைபோல் அரைக்க வேண்டும். அரைத் தெடுத்து அதனைச் சிறுசிறு துண்டுகளாகத் தட்டிக் காயவைத்துக் கருமான் உலையில் வைத்து ஊதச் சுண்ண மாகும்.

மந்திர முப்பூ

அவ்வாறு சுண்ணமாகா திருப்பின் மறுபடியும் அரைத்து அரைத்து ஊதச் சுண்ணமாகும். இதனை நீரில் கரைத்துச் சுண்ணும்புக் காரையால் பாத்தி கட்டி, அதில்விட்டு நீர் வறண்ட பின் மறுபடியும் எடுத்துக் கரைத்துப் பாத்தியில் விட வேண்டும்.

இவ்வாறு பத்துமுறை செய்து எடுக்கும் உப்பே மந்திர முப்பூ வாகும். இந்த முப்பூ அந்தந்த வித்தைகளுக்குரிய பொருள் களுடன் சேரும்பொழுது மக்களை வியப்பிலாழ்த்தும்.

மூன்றும் வகை முப்பூ

மருத்துவத்திற்கு மாண்பயன் நல்கும் மாமருந்தே இம் முப்பூ. இதனைக் குருமுப்பூ என்று சித்தர்கள் கூறுவர். குரு எவ்வாறு மாணாக்கன் அறியாததை அறியச் செய்வதோடு, அவன் திறமையை அறிந்து அந்த வழியில் அவனை மேம்படுத்துவாரோ அதே போன்று, ஒரு மருந்திற்குத் தேவையான ஆற்றலைக் கொடுத்து அஃது எந்த முறையில் எந்தப் பிணியைக் குணமாக்குமோ அதனை அவ்வழியில் மேன்மையுறச் செய்யுமாறு தூண்டும் ஆற்றலமைந்ததே இம் முப்பூ. இதுபற்றி அகத்தியர், ''மருத்துவத்திற்கு இது உயிர்காண்'' என்றும்;

''உறுதியென்ற முப்பூவின் சுண்ணம் வேணும்
இல்லையென்றால் ஒன்றுமில்லை உடைந்து நீராம்''

என்றும் 'குருநூல் முப்பூ' என்னும் பகுதியில் கூறியுள்ளார். இனி, ஒப்பில்லாகும் முப்பூவை உண்டாக்கும் வழியைக் காண்போம்.

மூன்று உப்பு

இம் முப்பூ பற்றிக் குறிப்பிடும்போது நிலத்தில் ஒன்று, இடியில் ஒன்று, கடலில் ஒன்று எனக் கூறுவர். இம் மூன்றும் சேர்ந்ததே முப்பூ. முப்பூவின் முதல் உப்பை எடுக்க நிலத் திற்குச் செல்வோம்.

நில உப்பு

உவர் நிலத்தில் பூத்திருக்கும் உப்பே நிலவுப்பு என்றும் பூநீர் என்றும் இன்னும் பல பெயர்களாலும் குறிப்பிடப்படும். இஃது உவர்நிலத்தில் குழல் குழலாக எழுந்தும், தோசை போன்று அப்பியும் கிடக்கும். இதனை எப்பொழுதும் எடுக்க இயலாது. ஒருவேளை, அவ்வாறு எடுத்தாலும் பயன்படாது. இதனை முழுநிலா நாளன்றுதான் எடுக்க வேண்டும். அதுவும் மீனம், மேழம் (பங்குனி, சித்திரை) மாதங்களில்தாம் எடுக்க இயலும். மகர, கும்ப (தை, மாசி) மாதங்களும் இதற்குச் சிறந்தது.

ஒலி எழுப்பும் உப்பு

இப்பூநீரை இரவு 2 மணி முதல் 4-30 மணிக்குள்ளாக எடுத்துக் கொள்ள வேண்டும். இந் நேரத்தில் மட்டுந்தான் இவ்வுப்பு முழு உயிர் பெற்றுத் திகழும். இவ்வேளையில் மட்டுமே இஃது இருக்கும் இடத்தினின்றும் ‘சடக்...சடக்’ என்ற ஒலி உண்டாகும். இவ்வொலி கேட்டு, இதனை எடுக்கும் பொழுது எடுப்பவரின் வல மூக்கில் காற்று ஓட வேண்டும். ஓடாதிருப்பின் வலமூக்கில் உயிர்ப்பு ஓடுமாறு செய்து கொண்டு எடுக்க வேண்டும். இவ்வாறு செய்வது அவ்வுப்பிற்குரிய முழுத் தன்மையையும், நம் கைபட்ட பின்பும் இழந்துவிடாமல் காக்கும். பின் இதனைத் தண்ணீரில் நன்றுகக் கரைத்துப் பத்து முறை தூய்மை (சுத்தி) செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

இடி உப்பு

இடி என்பது கடும் ஒலி. கடும் ஒலியை இடி என்றும் வெடி என்றுங் கூறலாம். எனவே, இடியுப்பு என்பது வெடி உப்பு. இவ் வெடியுப்பை 150 சீரெடை (கிராம்) தண்ணீரில் கரைத்துப் பதமாகக் காய்ச்ச வேண்டும். உரிய பதம் காண்ப தற்குக் காய்ச்சிய நீரைப் பனை ஓலையில் எடுத்துவைக்க உடன் அஃது உப்பாக உலரும். இப்பக்குவம் வரும்வரை காய்ச்சி, மண்பாண்டத்தில் இட்டு ஓரிடத்தில் அசையாது வைத்துவிட வேண்டும். சிறிது ஆறியபின் இரண்டு எலுமிச்சம் பழச் சாற்றை அதனுள் பிழிந்து மூடிவிட வேண்டும். இதை இரண்டு நாள் கழித்துப் பார்த்தால், உள்ளே உப்பு குச்சி குச்சியாக எழுந்திருக்கும். மூடியைத் தூக்கிக் கொண்டும் எழுவதுண்டு. இவ்வாறு பலமுறை செய்து குச்சியாக நீளும் உப்பை மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கடல் உப்பு

கடலுப்பு என்று குறித்தவுடன் எல்லோருக்கும் சோற்று உப்பு நினைவிலெழும். ஆனல், இங்குக் குறிப்பிடும் கடல் உப்பு என்பது கடல் நுரையே யாகும். ஆக, நாம் தூய்மை செய்து வைத்துள்ள நிலவுப்பு இடியுப்போடு இக் கடல் நுரையையும் சேர்த்துக் கலந்து கொள்வதே முப்பூவாகும்.

ஆய்ந்தறிதல்

இந்த முப்பூ உலகிலேயே மிக்க கடுங் காரத்தன்மை யுடையது. இதனைக் கடுங்காரச் சுண்ணம் என்றுங் கூறுவர்.

இது தன் முழுத் தன்மையுடன் உள்ளதா என்பதை ஆய்ந் தறிய ஒரு தேர்வு செய்யலாம். அஃதாவது, பத்தடி நீளமுள்ள ஒரு நூலை எடுத்து, இரண்டு கம்பங்களுக்கிடையில் கட்டி, அந் நூல் முழுவதும் மஞ்சளைப் பூசுக. நாம் ஆக்கிய முப்பூவில் ஒரு சிறு துளி எடுத்து, நீரில் நனைத்து நூலின் ஒரு நுனியில் மட்டும் வைக்க-உடனே மின்சாரம் போன்று பத்தடி நீளநூலும் சிவப்பாக மாறும். ஒருவேளை மாருதிருப்பின், நாம் முப்பூவை ஆக்கிய பக்குவம் தவறு என்பதை அறிந்துகொண்டு மீண்டும் செய்யலாம்.

இவ்வாறு ஆக்குவதை விடுத்து, நிலவுப்புத் தவிர, அடுத் துள்ள இரண்டு உப்புக்களுக்குப் பகரமாக வேறு உப்புக்களைப் பயன்படுத்தியும் இம்முப்பூவைச் செய்வதுண்டு. எவ்வழியில் செய்தாலும் மேற்கூறிய தேர்வு முறைக்குப் பொருந்தினுல் மட்டுமே அது முப்பூவாகும்.

பழமொழியின் பாங்கு

இந்த முப்பூவில் சிறு கடுகளவு அல்லது சிறு அரிசி அளவு எந்த மருந்தோடும் கலக்கலாம். முப்பூ சேர்ந்த மருந்தே பயன் உள்ள மருந்தாகும். இதனை எண்ணியே ''உப்பில்லாப் பண்டங் குப்பையிலே'' என்ற பழமொழி எழுந்தது. இப்பழ மொழியில் வரும் பண்டம் என்ற பொருளுக்கு உணவு என்றுங் கொள்வதுண்டு. என்ருலும் இப் பழமொழியின் உண்மைப் பொருள் முப்பூவின் பாங்கினைக் குறிக்க எழுந்ததே.

முடிவிடம்

ஞாலத்தில் யாருங் காணுத, சீலமிக்க முப்பூவின் சிறப் பெல்லாம் காலத்தால் அழிந்தது. அமிழ்தத் தமிழ் மருத்துவம் கண்ட அரும் பொருள் உமிழத்தக்க சிறியோரால் உருவிழந்து அமிழ்ந்திருந்தது. என்ருலும் இன்று அஃது எழுச்சி கொண் டெழுந்துள்ளது. இனி, எல்லா மருந்துகட்கும் இணையற்ற வேந்தனுய் முழு உலகிலும் முப்பூவே ஆட்சிபெறச் செய்து நாம் முழு வாழ்வுபெற முயல்வோமாக.

மருந்து

உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து.

—குறள். 950

தமிழில் எழுதுவோம்

[ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார், எம். ஏ.]

(சிலம்பு-௪௮, பரல்-௧, ௪௦ஆம் பக்கத் தொடர்ச்சி)

2. இயலும் செயலா

ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு, ஆங்கிலம் நமது நாட்டின் ஆட்சித்துறையில் அடி வைத்தது. நம்மவர்கள், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலங் கற்று, அரசு அலுவல் களில் புகுந்தனர். மேல்நிலை அலுவலகங்களில் ஆங்கிலேயரே அமர்ந்து, ஆட்சியை ஆங்கிலத்திலேயே இயக்கி வந்தனர். சிறுகச் சிறுக ஆட்சியின் எல்லாத் துறைகளிலும், ஆங்கிலமே பயின்று வரத் தொடங்கிற்று. சட்ட நிகழ்ச்சிகளுக்கும் ஆங்கிலமே பயன்பட்டது. ஆட்சிச் செயல்களுக்கும் அறம் கூறும் வகைக்கும், நம்மவர்கள் அம்மொழியை, அம்மொழியினர் வழங்குவது போலவே மரபு வழுவாது வழங்கும் ஆற்றல் பெற்றனர். இவ்வாறாக, இன்று ஆங்கிலம் ஆட்சியைப் பொறுத்தவரையில் நம் சொந்த மொழிபோல் ஆகிவிட்டிருக் கிறது.

இப்போது போய், ஆங்கிலத்தைத் தள்ளி வைத்து விட்டு, அஃது அமர்ந்து ஆட்சி புரிந்த இடத்தில், தமிழை அமரச் செய்வது பொருத்தமான செயல் ஆகாது. ஆங்கிலத்தில் எழுதுவதைப் போலத், தமிழில் எப்படி எழுத முடியும்? கருத்துகளை ஆங்கில மொழியில் வரைந்தால், விளங்குவது போலத் தமிழில் வரைந்தால் எங்ஙனம் விளங்கும்? ஆங்கிலம் படித்தவர்கள் மட்டுமேயன்றி, ஆங்கிலமே படிக்காதவர்கள்கூட ஆங்கில ஆட்சிச் சொற்களைச் சொன்னால் புரிந்து கொள்வரே. தமிழ்ச் சொற்களை அவர்கள் புரிந்துகொள்வார்களா என்பது ஐயம் ஆயிற்றே. ஆட்சியைத் தமிழுக்கு மாற்றுவதால் குழப் பந்தான் உண்டாகும் என்னும் அச்சம் மேலிடுகிறது.

இவ்வாறான எண்ணங்கள் சிலருக்குத் தோன்றத் தொடங்கின. ஆட்சி புரிய ஆங்கில மொழிக்கு மட்டுமே தனி ஆற்றல் இருப்பதாகப் பலர் கருதலாயினர். தமிழ் மொழிக்கு, அந்த ஆற்றல், நிரம்ப இருப்பதை உணராத நிலையில், அவர்கள் இருந்தனர். அன்றாடம் வீட்டிலும், வெளியிலும், தமிழில் பேசும்போதும், ஆங்கிலச் சொற்களை இடையிடையே சேர்க்கா விட்டால், தமிழில் பேச முடியாது என்றும் சிலருக்கு நினைப்பு. நெருங்கிய உறவினருக்கு மடல் எழுதும்போதும் ஆங்கிலம் கலந்த தமிழில் எழுதுவது என்னும் வழக்கம் மேலிட்டு வந்தது; ஆங்கிலத்திலேயே வரைவது எளிதாக இருப்பதுபோல் சிலர் உணரலாயினர். அவ்வாறே எழுதவும் செய்தனர்.

இங்ஙனமெல்லாம் எண்ணியும் செய்தும் வருபவர்கள், மூன்று வகையாக இருக்கின்றனர். முதல் சாரார், தமிழ் ஆட்சி மொழி ஆவதில் பெரிதும் பற்றுடையவரே. ஆனல், ஆங்கிலத்தில் பழகிவிட்டதால் அம்மொழி தமிழைக் காட்டிலும், எழுதுவதற்கு எளிதானது என்பதை அவர்கள் உண்மையாகவே உணர்கிருர்கள்.

ஆங்கிலத்தில் ஒரு வரைவோ (Draft) குறிப்போ (Notes) எழுத வேண்டுமானல், அதே போன்று பொருளில் முன்பே எழுதப்பெற்ற வரைவு குறிப்புகளைக் கொண்ட முன்தாளைத் தேடியெடுத்து வைத்துக்கொண்டு, அதைப் பார்த்து, எளிதில் கையிலுள்ள பொருளுக்கு வேண்டிய வரைவு குறிப்புகளை எழுதிவிட முடியும். தமிழில் எழுதுவதென்ருல், தாமாகவே புதுவதாக வரைய முயலவேண்டும். இங்ஙனம் செய்து பழக்கம் இல்லாமையால் சில காலம் வரையில் எழுதுவதில் தவக்கம் ஏற்படும். ஆங்கிலத்தில் போல அவ்வளவு பொருத்தமாகவும் தெளிவாகவும் எழுத இயலாது. அப்படி முயன்று வரைந்தாலும், மேல் அலுவலர்களுடைய ஏற்புக்கு (for approval) அவை போகும்போது அவர்களுக்கும் அவை புதியனவாக இருக்கும். ஆங்கில வரைவு குறிப்புகளுக்கு ஏற்பளிப்பது போல, அவற்றிற்கு ஏற்பளிக்கத் தயங்குவர். சிறிது காலந்தான் இப்படி இருக்கும் என்பதை அனைவரும் உன்னித்து உணர வேண்டும்.

ஆட்சி வகைக்குத் தமிழில் சில புதுச் சொற்களையும் ஆக்கிக் கொள்ள வேண்டிவரும். அச்சொற்கள், அலுவலகத்திலுள்ள எல்லா நிலையினரும் எளிதில் புரிந்து கொள்ள முடியாதனவாகவும், மனத்தில் நிறுத்திக் கொள்ளக் கூடாதனவாகவும் இருப்பது இயல்பே. ஆனல், அவையும் ஆங்கிலச் சொற்களைப் போலச் சில காலத்திற்குள் பழக்கமான சொற்கள் ஆகிவிடும் என்று சிறிது எண்ணிப் பார்த்தால் இத்தகையாரது குறை, ஞாயிற்றின் முன் பனிபோல், மறைந்துவிடும் என்பது திண்ணம்.

பொதுமக்களுக்கு அரசு அலுவலகங்களிலிருந்து தமிழில் கடிதங்கள் செல்வது மகிழ்ச்சி யளிக்கும். இதுவரையில் ஆங்கிலத்திலேயே வந்த கடிதங்களை ஆங்கிலந் தெரிந்தவரைத் தேடிக் கண்டு அவரிடம் தந்து அவர் தமிழில் மொழிபெயர்த்துச் சொன்னதைக் கேட்டுக்கொண்டு செல்லும் நிலைமாறித் தாமே தமிழில் வருவனவற்றைப் படிக்கும் பேறு பெறுவது அவர்களுக்கு மட்டிலா மகிழ்ச்சி யளிக்கும். ஏற்கனவே பழக்கமாகிவிட்டிருந்த, 'ஆபீசு' 'ஆர்டர்' 'மெமோ' போன்ற சில சொற்களுக்கு மாற்ருக அவற்றிற்கு ஈடான, 'அலுவலகம்' 'ஆணை', 'குறிப்பு மடல்' போன்ற தமிழ்ச் சொற்கள் பயன்படுத்தப்

பெற்றிருப்பதை அவர்கள் புரிந்துகொள்ள விரும்புவர். ஆங்கிலந் தெரிந்தவர்களுக்கு இருக்கும் விருப்பின்மை அவர்களுக்கு இராது. அடியோடு புதியனவான ஆங்கிலச் சொற்களை அவர்கள் கேட்டுக் கேட்டுப் புரிந்து கொண்ட அவ்வளவு நெடுங்காலம், அவற்றிற்கு நேரான தமிழ்ச் சொற்களைப் புரிந்து கொள்ளத் தேவைப்படாது. தமிழ் ஆட்சிமொழியாகிச் சில ஆண்டுகளே ஆகியிருக்கும் இச்சிறு அளவுக் காலத்தில், புதிதாகப் புனையப் பெற்ற எத்தனையோ தமிழ் ஆட்சிச் சொற்களை அவர்கள் அறிந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் போக, தமிழில் எழுதுவதில் உண்மையிலேயே அச்சங் கொள்ளக் கூடியவர்கள், தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களே. ஆங்கில ஆட்சிச் சொற்கள் அவர்களுக்குப் பழக்கமாகிவிட்டிருக்கின்றன. தமிழில் அவற்றைக் குறிக்கும்போது அவை அவர்களுக்கு விளங்காமல் இருப்பது உண்மையே. தமிழ் மொழிப்பற்று அவர்களுக்கு இயல்பாகவே இருப்பதற்கில்லை. ஆதலின் தமிழ்ச் சொற்களைப் புரிந்து கொள்ள அவர்கள் ஊக்கங்கொள்ள முனையாமல் இருப்பது இயல்பே. தமிழ்மொழிமீது அவர்களுக்கு வெறுப்பு இல்லையாயினும், ஆங்கிலமே தொடர்ந்து இருந்துவிட்டால், புதுத் தமிழ்ச் சொற்களையும், தமிழில் எழுதும் முறைகளையும், முயன்று அறிந்துகொள்ள வேண்டிய தேவையில்லாமற் போகுமே என்று அவர்கள் எண்ணக்கூடும்.

ஆனால், அவர்கள் இந்த அச்சத்தை உதறித் தள்ளிவிட்டுத் தமிழில் எழுத முற்படுவார்களாயின் விரைவில் அவர்கள் வியக்கத்தக்க வகையில் இத்துறையில் ஆற்றல் பெற்று விடுவார்கள் என்பதில் ஐயமில்லை. அப்படியே பலர் பெற்று விட்டிருப்பதையும் காணலாம். வீட்டில் பேசுவது, தமிழல்லாத வேறு மொழியாயினும், அவர்கள் தமிழ்நாட்டில் வாழ்வதனால் தமிழே இந்நாட்டில் அவர்கள் வாழ்க்கைக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாத மொழியாகும். 'தாய் மொழி' என்பதற்கு ஒருவருக்குத் தாயைப்போல வாழ்வுக்கு இன்றியமையாது தேவைப்படும் மொழி என்னும் ஒரு பொருளும் உண்டு. அவ்வகையில் தமிழும் அவர்களுடைய தாய்மொழி யாகின்றது. அப்படியே ஆந்திர நாட்டில் வாழும் தமிழர்களுடைய 'தாய்மொழி' தெலுங்கும் ஆகும் என்பதை மறுக்க முடியாது. ஆந்திராவில் தெலுங்கு ஆட்சிமொழியாவதை அங்குள்ள தமிழர்கள் வரவேற்று ஒத்துழைக்க வேண்டும். இம்மனப்பாங்கு, இங்குள்ள பிற மொழியாளர்களுக்கு இருந்தாக வேண்டியிருக்கிறது.

இவ் விரண்டாவது வகையினரும் போக, மூன்ருவதாக, இனி இங்குச் சொல்லப்போகும் சிலராலேயே தமிழ் ஆட்சி மொழியாவது விரும்பப்படாமல் இருக்கிறது என்பது பொய் யன்று. இவர்களுடைய தாய்மொழி தமிழ் என்று அறியும் போது திடுக்கிடவேண்டி யிருக்கிறது. காலில் சரேல் என்று முள் தைத்தால், 'அப்பாடி' 'அம்மாடி' என்று தமிழில் அலர் கிறவர்களே இவர்கள். வடமொழியை இவர்கள் படித்திருக் கவும் மாட்டார்கள். அன்ருடப் பூசையில், சில வடசொற் களேயோ தொடர்களேயோ இவர்கள் சொல்லத் தெரிந்து கொண்டிருப்பதைத் தவிர இவர்களுக்கு வடமொழி இலக் கியமோ இலக்கணமோ தெரியாமலும் இருக்கும். இருந்தாலும் இவர்கள் அம்மொழியில் பற்று வைத்துக்கொண்டு, தமிழைத் தாழ்வாகக் கருதவும் மனமுடையவர்களாக இருக்கிருர்கள். வெளிக்குத் தமிழைப் போற்றுவது போலக் காட்டிக்கொண்டு, உள்ளூரத் தமிழுக்கு இரண்டாவது இடத்தையே தரும் வழக்கம் இவர்களுக்கு இயல்பாகவே அமைந்து விட்டிருக்கிறது. இவர் களில் மிகமிகச் சிலராவது இதற்கு விதிவிலக்காக இருந்து வருவது மகிழ்ச்சியளிக்கும் செய்தியாகும்.

தமிழுக்கு மாற்ருக, வடமொழியில் ஆட்சியை நடத்துவது என்று முடிவு செய்தால், இவர்கள் ஆர்வத்தோடு அதனே ஏற்றுக் கொள்வார்கள் போலத் தோன்றுகிருர்கள். தமிழில் பல வடசொற்களேக் கலந்து எழுதுவது என்ருல் இவர்கள் விரும்புவார்கள். இப்படித் தேவையில்லாத எத்தனேயோ வட சொற்களேத் தமிழில் பேசுவதிலும் எழுதுவதிலும் புகுத்தி விட்டிருப்பதை அனேவரும் அறிவர். இன்னமும் அப்போக்கு இவர்களிடையே இருந்து வருவதை எவரும் அறிந்து கொள் ளக்கூடும். நல்லதும், பொருத்தமானதும், எளிமையானது மான ஒரு தமிழ்ச்சொல் இருக்கவும் அதனேப் புறக்கணித்து விட்டு அதற்கு மாற்ருக ஒருவடசொல்லே அஃது எளிதில் வாயில் நுழையாததாக இருந்தாலும் அதையே பயன்படுத்துவதில் பற்றுள்ளம் வைப்பது, தமிழராகப் பிறந்து விட்டவர்களுக்குப் பொருத்தமானதாகாது. இம்மனப்போக்கு உடையவர்கள், 'Vice Chanceller' என்பதற்குத் 'துணே வேந்தர்' என்னும் அழகான தமிழ்ச்சொல் வழக்கத்தில் இருந்து வந்தும், இன்று கூட, இதனேத் தவிர்த்து விட்டு, 'உப அத்யக்ஷகர்' என்னும் கடுமையான ஓசையுடைய வடசொல்லேப் பயன்படுத்துவதைப் பார்க்கலாம்.

வடமொழி நம் அனேவருக்கும் பொதுவான மொழி. அதற் கெனத் தனி இயல்பு உண்டு. கடுத்த ஓசையுடையது. அப்

படியே, அம்மொழியைப் பயில்வதில் ஆர்வங் கொள்ளலாம். தமிழுக்குப் போட்டியாக இப்பெருமொழியை முட்ட விடுவது பொருத்தமாகாது. இயன்றவர்கள் பலர் வடமொழியைப் படிக்கலாம். அதில் புலமை பெறலாம். ஆனால், அதில் தமிழ்ச் சொற்களையோ, தமிழ் மரபையோ புகுத்த எண்ணுவது தவறு. அங்ஙனமே தமிழில் வடசொற்களை விரவிவிடச் செய்வது வடமொழியை வளர்ப்பதாகாது. தமிழும் இக் கலப்பினால், சிறப்படைந்து விடும் என்று எண்ணுவது தப்பு. தமிழில், தேவையில்லாமல், பல வடசொற்களைப் புகுத்திவிட்டுப் பிறகு, வடமொழியிலிருந்துதான் தமிழ் வந்தது என்று புனைந்து கூறும் வழக்கமும், சிலரிடையே இன்னமும் இருந்து வருவதைக் காணலாம். இதனால், வடமொழிமீது வீணான பகையையும் வளர்க்க ஏன் வழி செய்ய வேண்டும்?' இரு மொழிகளும் தனித்தனியே அவற்றின் இயல்பு கெடாமல் இயங்க வேண்டுமாயின் வளர வேண்டுமாயின் இம் மனப்போக்குத் தவிர்க்கப்பட வேண்டுவது இன்றியமையாததாகும்.

ஒரு செய்தி இதுபோது வந்து நினைவில் உறுத்துகிறது. ஓர் அயல் நாட்டில், அந்நாட்டவர் ஒருவர், தமிழ் படிக்க விரும்பினார். அங்கிருந்த நம் நாட்டுத் தூதுவர் அலுவலகத்துக்குச் சென்றார். அவ் வலுவலக மேலவர்களில் ஒருவர் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர். அவரிடம் சென்று தமிழ் மொழியைப் பற்றிய சிறப்புகளை அறிய விரும்பினார் அவ்வயல் மொழியார். அத்தமிழர் “தமிழை நாங்கள் கொச்சை வழக்கத்திற்கு (For Slang Purposes)த்தான் பயன்படுத்துகிறோம். நாங்கள் போற்றும்மொழி சமற்கிருதம். உயர்ந்த வழக்குகள் யாவற்றுக்கும் அம்மொழியே எங்களால் பயன்படுத்தப் பெறுகிறது” என்று கூறினாராம். கொச்சை வழக்கு என்றால் என்ன என்று ஓர் எடுத்துக் காட்டில் கூறுங்கள் என்றபோது, பட்டிக்காட்டில் பாடப்படும் இடக்கரான பாட்டு ஒன்றைப் பாடிக் காட்டினாராம் அவ்வலுவலர். அதை அப்படியே மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டிருக்கிறார் அந்த அயல் நாட்டவர். கேட்டதின் பேரில் பாடியும் காட்டினர். அயல் மொழியாராதலின் சிறிதும் அருவருப்பின்றிப் பாடுகிறார்; நமக்குக் காது கூசுகிறது. அப்போது எங்களிடையே பெண்பாலர் எவரும் இல்லாதிருந்தது நல்லதாயிற்று. ஒரு தமிழர் தம் தாய் மொழியைப் பற்றி இப்படியா எண்ணுவது, சொல்லுவது ?

இத்தகைய உளப்போக்குக் கொண்டவர்கள் மிகச் சிலராகவே தமிழரிடையே யிருந்தாலும், அவர்கள் அறிவு வளமும்,

உலகியல் செல்வாக்கும், எண்ணிய எண்ணியாங்கு செய்து முடிக்கும் திண்மையும், பொருந்தியவர்களாக இருப்பதால், அவர்கள் மனம் தம் அன்னை மொழியின்பால்—தமிழின் பால்—நல்ல வண்ணம் மாறினுலொழிய, தமிழின் சிறப்புக்குக் கேடு நேருமே என்னும் கவலை மீதூர்கிறது. வடமொழியை வளர்ப்பதில் மற்றவர்களின் ஒத்துழைப்பை நாடட்டும், அளிப்போம், நம் நாட்டு உயர்மொழிகளில் ஒன்றுன அம்மொழி சிறப்பதற்குப் பாடுபடட்டும், நாமும் தோள் தருவோம். ஆனால், தாயாகிய தமிழை இழித்து, இவ்வாறு செய்ய வேண்டாம். வடமொழி தமிழில் இடம்பெற வேண்டும் என்னும் உட்கருத்தோடு, தமிழ்ப் பேச்சிலும் எழுத்திலும் பிறமொழிச் சொற்களை ஆங்கிலம் உள்படச் சேர்த்தால்தான் தமிழ் வளரும் என்னும் வாதத்தை வற்புறுத்திக் கூறுமல் இருக்க வேண்டும். பிறமொழிக் கலப்பால் தமிழ் வளருமா? 'ஆங்கிலத்தைப் பாருங்கள்' என்று காட்டுவதில் பொருளுண்டா? என்னும் செய்திகள் பற்றிய உண்மைகள் இனிவரும் கட்டுரைகளில் விளக்கப்பெறும்.

இப்போதைக்கு, எவ்வகைக் குறையோ, அருவருப்போ, அச்சமோ, ஐயமோ இல்லாமல் தமிழில் ஆட்சி நடத்துவதில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். முதலில் சிறிது இடர்ப்பாடு இல்லாமல் இராது. ஒரு நெடுங்காலப் பழக்கத்தை விட்டுவிட்டு, இன்னெரு பழக்கத்தைக் கைக்கொள்ளும்போது, ஓரளவு இடர் இருக்கத்தான் செய்யும். அதைப் பொருட்படுத்தாமல், நாம் அனைவரும், தமிழ் ஆட்சி மொழியாக இயங்குவதில் மனமார ஒத்துழைப்போமாக! நாட்டின் விடுதலைக்காக நம்மவர்கள் பலர் என்னென்னவோ இன்னல்களை நுகர்ந்திருக்கிறுர்கள். அவ் விடுதலையின் பயனுக நாம் பெற்றுள்ள நன்மைகளில் ஒன்று நம் அன்னை மொழியை ஆட்சிமொழியாக்கியிருப்பது. அங்ஙனம் ஆக்குவதில் ஏற்படும் சிறிதளவு இடும்பையை நாம் பொறுத்துக் கொள்ளக் கூடாதா? பொறுத்துக் கொள்ள வேண்டாவா?

ஒரு பழக்கத்தைத் தவிர்ப்பதற்கு இன்னெரு பழக்கத்தை மேற்கொள்வதே முறை. ஆங்கிலத்தில் வரைந்து வந்த பழக்கத்தை நீக்குவதற்கு முழுமனதோடு தமிழில் வரைந்து பழகுவதுதான் வழி. இப்புதுப் பழக்கத்தால் நாம் கற்பனையாலும் கருத்து வேறுபாட்டாலும் கொண்டுள்ள குறைகள் தாமாகவே மறைந்து போகும். தமிழில் எழுதுவது எளிதில் இயலும் செயலே என்று முழங்குவோம்.

> "பழக்கத் தவிரப் பழகுவது அன்றி,
> உழப்புவது என் பெணே! உந்தீ பற"

———

பேராசிரியர் பெரும்பிரிவு

[டாக்டர் சி இலக்குவனர்]

புலவர் இரா. இளங்குமரன்

'ஒளி படைத்த கண்; உறுதி கொண்ட நெஞ்சு; களி படைத்த மொழி; கடுமை கொண்ட தோள்; தெளிவு பெற்ற மதி; சிறுமை கண்டு பொங்கும் உணர்வு; எளிமை கண்டு இரங்கும் அருள்; ஏறுபோல் நடை; நொய்மையற்ற சிந்தை; நோய்களற்ற உடல்; கற்ற ஒன்று பொய்க்காமை; கருதியது இயற்றுதல்'—இவற்றை யெல்லாம் ஒன்ருகக் கூட்டி வண்ண ஓவியம் வனப்புறத் தீட்டி வைத்தாற் போன்ற திருவுருவினர் பெரும் பேராசிரியர் சி. இலக்குவனர் அவர்கள்.

இராமேச்சுரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் கண்கவர் எழிலுடன் திகழும் 'இலட்சுமணன்' சிலையினைக் கண்டு 'கண்களி மயக்கம்' கொண்ட தாய்வழிப் பாட்டியார், பல்காலும் தோய்ந்து நின்று சூட்டிய பத்திமைப் பெயரே, 'இலட்சுமணன்' என்பது.

'இராசா மடம்' என்னும் அரசர் மடத்தில் பேராசிரியர் இரண்டாம் படிவம் பயின்று கொண்டிருந்த காலை, அவண் ஆசிரியராகத் திகழ்ந்த அறிஞர் சாமி சிதம்பரனர் 'இலட்சுமண' வடமொழிப் பெயரை, 'இலக்குவன்' எனத் தமிழ் வடிவாக்கிச் சூட்டிப் பேருவகையுடன் அழைத்தார். அப்பெயரே அருந்தமிழ் உலகம் அறிந்த பெயராயிற்று.

வடமொழி இலட்சுமணப் பெயரை முதற்கண் தமிழ் வடிவாக்கித் தகவுறப் போற்றிய வித்தகர் கவிஞர் கோவாம் கம்பர் ஆவர். அவர், இலக்குவனை இராமன் வாக்காக,

> "இலக்குவ உலகமோர் ஏழும் ஏழும்நீ
> கலக்குவன் என்பது கருதி னுலது
> விலக்குவ தரிதது விளம்பல் வேண்டுமோ?"

என்று கூறியதை மெய்ப்பிக்கும் அடலேருய் அமைந்தார் இலக்குவனர். அவ்வளவில் நிற்காமல் இலக்குவப் பெயர்க்குத் தமிழ் மூலம் தந்த பெருந் திருவாளரும் இலக்குவனரே ஆவர்.

"யான் இப்பெயர்க்கு வடமொழித் தொடர்பை அகற்றித் தமிழ் மூலம் கொடுக்கத் தொடங்கி விட்டேன். இலக்குவன் என்பது தனித் தமிழ்ச் சொல்லே. **குறிக்கோளை உடையவன்** என்பது அதன் பொருள்"

தமிழகத்தின் நெற்களஞ்சியமாம் தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப் பூண்டி வட்டத்தில் வாய்மேடு எனப் பெறும் வாய்மைமேடு என்னுஞ் சிற்றூர் உளது. அவ்வூரே,

"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்"

என்பதற் கேற்பத் தோன்றிய பேராசிரியரைத் தாங்கும் பேறு பெற்றது.

வாய்மேட்டில் தாளாண் சிறந்த வேளாண் தொழிலினராய் விளங்கிய சிங்காரவேலுத் தேவர் ரத்தினம் அம்மாள் இவர்தம் சீரிய இல்லறப் பயனுல் பேரறிஞர் அண்ணு தோன்றிய சௌமிய ஆண்டில், கார்த்திகைத் திங்கள் முதல் நாளில் (17-11-1910) மூன்ரும் திருமகனுராகப் பேராசிரியர் தோன்றினுர்.

வாய்மேட்டில் திண்ணைப் பள்ளியில் தொடக்கக் கல்வி பெற்ற பேராசிரியர் அரசர் மடத்தில் நடுநிலைக் கல்வி பெற்ருர். ஆங்கு மாணவர் நலங்களைத் தேர்ந்து தேர்ந்து பணிசெய்த பெருந்தகை சோமசுந்தரம் பிள்ளை தலைமையாசிரியராக இருந் தார். பொது அறிவு கற்பிக்கும் ஆசிரியராகத் திகழ்ந்தவர் சாமி. சிதம்பரனுர். பேராசிரியர், அவர்தம் அணுக்கராயினுர். சிதம்பரனுரின் பகுத்தறிவுக் கோட்பாடுகளும், சீர் திருத்தக் கருத்துக்களும், தனித்தமிழ் நாட்டமும் பேராசிரியரிடம் கால் கொண்டு தளிர்த்தன. திரு. சோமசுந்தரம் பிள்ளை உரத்த நாட்டிற்குத் தலைமையாசிரியராக மாறிச் சென்ருர். அவ் விடத்தில் நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களின் இளவலார் ந. மு. கோவிந்தராச நாட்டார் பொறுப்பேற்ருர். திரு. ந. மு. கோ. அவர்கள் சைவ சமயத்தில் ஆராக் காதல் கொண்டவர்கள். அவர்களால் தோற்றுவிக்கப் பெற்ற 'கண்ணு தனர் கழக'த்தில் பெரும் பங்கு கொண்டார் பின்னுள் பேராசிரியர்.

அரசர் மடத்தில் மூன்ரும் படிவம் முடித்தவர் உரத்த நாட்டு உயர்நிலைப் பள்ளி சென்று பயின்று வந்தனர். அவ்வாறே பேராசிரியரும் அவண் சென்று கற்ருர். ஆங்குத் தமிழாசிரிய ராக இருந்தவர் பொன்னண்ணுக் களத்தில் வென்ருர் என்னும் பெருந்தகையர். அவர் தமிழ் மணம் உண்டு உயிர்த்த தன்றித் திருமணம் மேற்கொண்டிலர். அகவை முதிர்ந்த காலையிலும் ஆங்கிலம் கற்கும் அவாமீக் கூர்ந்து இளைஞர் இலக்குவரிடம், விடுமுறைக் காலங்களில் அறுசுவை அமுதும், அருந்தமிழ் அமுதும் ஊட்டி, ஆங்கிலங் கற்று வந்தார். பள்ளிப் பருவத் திலேயே மேற்கொள்ளப் பெற்ற இவ்வாய்ப்புக்கள் அனைத்தும்

பின்னுளில் பெருக்கெடுத்து வெள்ளமாய்ப் பாய்ந்தமை தமிழ் உலகு நன்கு அறிந்ததே யாம்.

சரபோசி மன்னர் அறக்கட்டளையால் உண்டுறை விடுதிகளுடன் இயங்கி வந்தவையே அரசர் மடம், உரத்தநாடு பள்ளிகள். அப்பள்ளி விடுதிகளில் தங்கிப் பயின்ற பேராசிரியர் பள்ளி இறுதித் தேர்வில் சிறப்புறத் தேறினர். புலவர் தேர்வு பெறுதற்காகத் திருவையாற்று அரசர் கல்லூரியில் சேர்ந்தார். ஆங்கும் உண்டுறை விடுதி வாய்ப்பு இருந்தது. அப்பொழுது அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பணி செய்து கொண்டிருந்த திரு. சுப்பிரமணிய சாத்திரியார் திருவையாற்றுக் கல்லூரி முதல்வராக வந்து சேர்ந்தார். திருவாளர்கள் உலகநாத பிள்ளை, சந்தான ஐயங்கார், சோமசுந்தர தேசிகர், இராம. கோவிந்தசாமி பிள்ளை, கரந்தைக் கவியரசு அரங்க வேங்கடாசலம் பிள்ளை ஆகியோர் பேராசிரியர்களாக இருந்தனர்.

தாம் அங்குப் பயின்று கொண்டிருந்த காலையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும், தம் தொண்டுள்ளத்தையும் வெளிப்படுத்துமாறு பேராசிரியர் உரைத்துள்ள குறிப்புகளுள் சிலவற்றைக் காண்க.

"யான் இலக்குவன் என்று பெயர் வைத்திருப்பதை அவர் (திரு. சுப்பிரமணிய சாத்திரியார்) விரும்பவில்லை. வடமொழி வெறுப்பாளனுகவே என்னைக் கருதினர்.

"வகுப்புக்களில் எனக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடு நிகழ்வதுண்டு. தமிழின் தொன்மை தூய்மை பற்றித் தவருன கருத்துக்களைச் சொல்லின் யான் எழுந்து மறுக்காமல் இருப்பதில்லை.

"அங்குத் திருவள்ளுவர் மாணவர் கழகம் என்ற ஒன்று உண்டு. அதன் செயலாளர் பதவிக்குப் போட்டியிட்டேன்; யானே வென்றேன்; தமிழ் வென்றது என மாணவர்கள் முழங்கினர்; செயலாளராக வெற்றி பெற்றேன். ஆனல் தொண்டாற்ற இயலவில்லை. கல்லூரி முதல்வர் என்னுடன் ஒத்துழைக்கவில்லை. செயலாளராகிய யான் செயலற்று இருந்தேன். என் தனித் தமிழ்ப்பற்றுல் விளைந்த வினை.

"எனக்கு நெருங்கிய நண்பர்களாகவும் துணைவர்களாகவும் இருந்தவர்கள் அ. கிருட்டிணமூர்த்தி, அன்பு கணபதி, முருக இலக்குவன் ஆவார்கள். நால்வரும் இணைந்து மாணவரிடையே தூய தமிழ்ப்பற்றை உருவாக்கும் பணியில் ஈடுபட்டோம். பொதுமக்களிடையே தூய தமிழ்ப்பற்றை வளர்க்க வேண்டும் என்று திட்டமிட்டோம். ஏசு சமயத் தொண்டர்கள் போல்

ஊர் ஊராகத் தெருத் தெருவாகச் சென்று ஏன் சொற்பொழிவு ஆற்றக் கூடாது என்று எண்ணினேம்.''

''என் வாழ்க்கையே தமிழ்நலம் நாடிய போராட்டக் களம்தான்'' என்று கூறும் பேராசிரியரின் முதற் போராட்டக் களம் திருவையாற்றுக் கல்லூரி ஆயிற்று. அவரைத் தமிழ்த் தொண்டுக்கு ஆட்படுத்தியதும் அக்கல்லூரியே ஆயிற்று.

அரசர் கல்லூரியில் பயிலும் போதே இலக்கணப் பயிற்சியிலும், மொழியியல் ஆராய்ச்சியிலும் மிக ஈடுபட்டார். தொல்காப்பியர் காலத்தை ஆய்ந்து கட்டுரை எழுதி இதழில் வெளியிட்டார். அவ்வப்போது கவிதைகளும் யாத்தார். புதுக்கோட்டையில் ஒன்பான் இரவு விழாவின் சார்பில் நிகழ்த்தப் பெற்ற தமிழ்ப் புலமைப் போட்டியில் முதன்மை பெற்று முப்பது வெண்பொற் காசுகள் பரிசு பெற்ருர். புலவர் தேர்வில் கல்லூரியில் முதன் மாணவராகத் தேர்ச்சி யடைந்தார்.

புலவர் படிப்பால் பெற்ற பயன் என்னே? ''தமிழகத்தின் உரிமைக்கும், தமிழ் மொழியின் உயர்வுக்கும் உழைப்பதே எனது உறுகடனும் என்று உறுதி கொள்ளச் செய்தது. 'தமிழ்ப் போரே எனது வாழ்க்கைப் போர்' என்னுங் குறிக்கோளே வாழ்வின் உயிராக ஏற்றுக் கொண்டேன்; புலவர் படிப்பால் பெற்ற பெரும்பயன் இஃதேயாம்!''—பேராசிரியரின் உரையை இன்றேனும் தமிழ்ப் புலவர்களும், தமிழ்ப்பட்டம் பெறுபவர்களும், தமிழ் ஆர்வலர்களும் எண்ணிப் பார்ப்பார்களாக.

புலவர் சான்று பெற்றதும் மாவட்டக் கழக உயர் பள்ளியில் தமிழாசிரியராகப் பணி தொடங்கினர் பேராசிரியர் பணி செய்து கொண்டே பட்டம் பெறுதற்குரிய வழிகளிலும் முயன்ருர். தமிழ்த் தொண்டுகளிலும் தனியார்வத்தோடு ஈடுபட்டார். இவையெல்லாம் நாடறிந்த நற்செய்திகள் ஆகலின் சுருங்க உரைப்பாம்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் புலவர் பட்டம் பெற்றவர் இடைநிலை வகுப்பு முதற்பகுதி ஆங்கிலத்தையும், இளங்கலை வகுப்பு முதற்பகுதி ஆங்கிலத்தையும் கற்றுத் தேர்வு எழுதி வெற்றி பெற்று, ஏதேனும் இரண்டு தகுதிச் சான்றிதழ்த் தேர்வுகளிலும் (Certificate of Proficiency) தேர்ச்சி பெற்ருல் கீழ்த்திசைக் கல்வி இளங்கலைப் பட்டம் (B. O. L.) பெறலாம் என்ற விதி இருந்தது. அதன்படி பி. ஓ. எல். பட்டம் பெற்ருர். பேராசிரியர் அப்பட்டம் பெற்ருேர்க்குப் பின்னர் எம். ஏ., பட்டமும் வழங்கப் பெற்றது. அதனல் பி.ஓ.எல்., எம்.ஏ. என்னும் இரண்டு பட்டங்களுக்கும் உரியவரானர்.

'தமிழ் மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்' (Origin and Growth of Tamil Language) என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றெழுதி 'எம்.ஓ.எல்' பட்டம் பெற்றார். அகவை ஐம்பது கடந்தாலும் அயர்வின்றித் தொல்காப்பியம் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஆராய்ச்சி முன்னுரையும் விரிவாக எழுதிப் பண்டாரகர் பட்டம் பெற்றார். தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து மேனாட்ட வரும் வியக்கச் செயலாற்றிய பெருமிதம் பேராசிரியர் அவர் கட்கே உண்டு! ''செயற்கரிய செய்வார் பெரியர்'' என்பதற் கேற்பச் செயலாற்றிய செந்தமிழ் மாமணி பேராசிரியர் அவர்கள் ஆவர்.

பேராசிரியரின் தமிழ்ப்பணி 1936 ஆம் ஆண்டில் திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் தொடங்கியது. தமிழக முதல்வர் கலைஞ ரவர்கள் அந்நாளில் இவர்தம் மாணவராகத் திகழ்ந்தனர். ஆறாண்டுகள் தஞ்சை மாவட்டக் கழகப் பள்ளிகளில் பணி யாற்றினர். அதன் பின்னர் ஈராண்டுகள் திருவையாறு அரசர் கல்லூரியிலும், மூன்றாண்டுகள் திருநெல்வேலி, மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரியிலும், ஐந்தாண்டுகள் விருதுநகர் இந்து நாடார் கல்லூரியிலும் விரிவுரையாளராகவும் பேராசிரியராகவும் பணி செய்தனர். 1952 இல் விருதையில் இருந்து வெளியேறி ஓராண்டு திருவெறும்பூர் முக்குலத்தோர் உயர்நிலைப் பள்ளி முதல்வராகவும், ஈராண்டுகள் ஈரோடு மகாசன கல்லூரி விரிவுரையாளராகவும், மூன்றாண்டுகள் நாகர் கோயில் இந்துக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகவும், ஆறாண்டுகள் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணி புரிந்தனர்.

இக் காலங்களில் பேராசிரியர் செய்த பணிகள் எண்ணிறந் தன; கன்னித்தமிழ் வளர்த்தலைக் கல்லூரி அளவில் நிறுத்தினா ரல்லர்; ஒல்லும் வகையால் ஓவாது செல்லுமிடமெல்லாம் ஒண்டமிழ் வளர்ச்சிக்கே உழைத்தார். தமிழுக்கு ஆக்கஞ் சூழ் வாரை அரவணைத்துக் கொண்டார்; நெஞ்சார வாழ்த்தி நேர் நின்று பாராட்டினார். தமிழுக்குக் கேடு சூழ்வாரை அஞ்சாது நின்று அடலேறெனத் தாக்கினார். எத்தகு பதவியர் ஆயினும் எந்நிலையர் ஆயினும் மொழிக்கேடரை இடித்துரைக்க அவர் நா சோர்ந்ததில்லை. ''செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க செய்யாமை யானும் கெடும்'' என்னும் குறள் நெறிக் கொள்கை யில் தலை நின்றார். பேராசிரியர் தம் தமிழ்த் திருத்தொண்டில் முடிமணி எனத் திகழ்வது தமிழ்க் காப்புக் கழகம் கண்டதும், அதனைச் சார்ந்த பணிகள் பல செய்ததுமாம்.

(தொடரும்)

அகத்திணை நோக்கில் சங்க நூல்கள்

ம. ரா. போ. குருசாமி, M. A., M. Litt.,

[நிறைகலைப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்,

பூ. சா. கோ. கலைக் கல்லூரி, கோவை.]

0.0 அகத்திணை நோக்கில் சங்க நூல்களை நான்கு வகையாகப் பகுக்கலாம்.

1.0 தனித் தனித் துறைபற்றி, தனித் தனிப் புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு முதல்வகை. இப் பிரிவில் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகியவை அடங்கும். பல்வேறு துறைகள் பற்றிப் புலவர்கள் தனித் தனியே பாடிய பாடல்களின் தொகுதி இவை என்பது மட்டுமன்றி, இவற்றிடையே யாப்பு வகையாலும் ஒற்றுமை யுண்டு; இவை யாவுமே ஆசிரியப் பாக்களால் ஆனவை. மேலும், வரிகளின் சிற்றெல்லை, பேரெல்லை நெறியிலே இவற்றிடையே ஓர் ஒருமைப்பாடுண்டு. ஒன்றின் எல்லை முடிகின்ற இடத்தில் மற்றொன்றின் எல்லை தொடங்கும்.

குறுந்தொகையின் வரி வரையறை 4—8.

நற்றிணையின் வரி வரையறை 9—12.

அகநானூறு (அல்லது)

நெடுந்தொகையின் வரி வரையறை 13—31.

குறுந்தொகையை முதலிலும், நெடுந்தொகையை இறுதியிலும், இடையினதாக நற்றிணையையும் கொள்ளுதற்கு இவ்வரி வரையறை இடம் தருகிறது. குறுமை, நெடுமை, நல் என்ற அடைமொழிகள் இவ்வகையில் பொருத்த முடையனவே என்று எண்ண இடமுண்டு. தொகுத்தவர்கள் இவ்வரி வரையறையினை முன் அமைத்துச் செய்தனரா எது முன்னது; எது பின்னது அன்றி இவ்வரையறை தற்செயலாக அமைந்ததா என்பன பற்றி உறுதிப் படுத்தி, அறுதியிட்டுக் கூறச் சான்றுகள் எவையுமில்லை. இவ் வரையறையினை மனத்தே கொண்டு காலத்தால் எது முந்தியது எது பிந்தியது என்பது பற்றி ஆய்வாளர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களெல்லாம் உய்த்துணர்வின் விளைவுகளேயன்றி, உறுதியானவை ஆகா.

1.1 வரிகளின் சின்மை, பன்மையை ஒட்டிப் பாடலின் பாங்கும் அமைந்துள்ளது. பாடல்கள் விரிவாக இருக்குமிடத்து முதல், கரு, உரி ஆகிய மூன்றும் விரிவுறப் பாடப்பெற்றுள்ளன. பாடல்கள் அளவிற் சுருங்குமிடத்து மேற்

குறித்த முப்பொருள்களும் இடம் பெறுகின்றபோது செறிவு காணப்படுகின்றது. முப்பொருளும் அமைய முடியாவிடத்து உரிப்பொருள் இயல்பாகவே தலைமை பெறுகின்றது. அகநானூறு, நற்றிணை ஆகியவற்றில் அகப்பொருளுக்கு அப்பால் வரலாற்றுச் செய்திகளும் இடம் பெறுவதுண்டு. குறுந்தொகையில் வரிச்சுருக்கம் காரணமாகவும், கருத்துச் செறிவு காரணமாகவும் இக் குறிப்புக்கள் இடம் பெறுவதில்லை.

1.2 முதல் வகையைச் சேர்ந்த இம்மூன்று நூல்களுள் அகநானூற்றின் அமைப்பில்மட்டும் திணைப்பாகு பாட்டிலே ஓர் ஒழுங்கு காணப்படுகின்றது. பாடலின் எண் நினைவில் எழுமாயின் அஃது எத்திணைக் குரியது என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். இதனை விளக்கும் நினைவுக் குறிப்புப் பாடல்கள் மூன்றில் பின் வருவது ஒன்று :

''பாலை வியமெல்லாம் பத்தாம் பனிநெய்தல்
நாலு நளிமுல்லை நாடுங்கால்—மேலையோர்
தேரும் இரண்டெட் டிவைகுறிஞ்சி செந்தமிழின்
ஆறு மருதம் அகம்''

1.3 இனித் திணைவாரியாக இம்மூன்று நூல்களில் அமைந்துள்ள பாடல்களின் எண்ணிக்கையைப் பின்வரும் பட்டியலில் காணலாம் :

	குறிஞ்சி	முல்லை	மருதம்	நெய்தல்	பாலை
குறுந்தொகை	147	45	48	71	90
நற்றிணை	131	30	32	102	104
அகநானூறு	80	40	40	40	200

2.0 திணைக்கொரு புலவராக ஐந்து திணைகளையும் தனித் தனியே பாடிய புலவர்களின் பாடற்றொகுப்பால் ஆகியது சங்க இலக்கிய அகப்பொருள் நூல்களின் இரண்டாம் வகை. இப் பிரிவு ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய நூல்களைக் கொண்டது.

2.1.0 இவற்றுள் ஐங்குறுநூறு அகவற்பாவாலும், கலித் தொகை கலிப்பாவாலும் ஆகியவை. ஐங்குறு நூற்றுத் திணைப்பாகுபாடுகளைப் பாடிய புலவர்களைப் பற்றிய நினைவுக் குறிப்புச் செய்யுள் வருமாறு :

''மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்
கருதும் குறிஞ்சி கபிலன்—கருதிய
பாலைஓத லாந்தை பனிமுல்லை பேயனே
நூலையோ தைங்குறுநூ று''

இப் பாடலின் வரிசை யமைப்பிலேயே திணைக்கு நூறு பாடல்கள் வீதம் ஐங்குறுநூற்றுப் பாடல்கள் அமைந்துள்ளன.

2.1.1. ஐங்குறுநூற்று முதல் கரு உரிப் பொருள் அமைதியில் முதல்வகை நூல்களின் கருத்தமைதியினைக் காணலாம். முதல், கரு, உரிப் பொருள்களின் பாங்கில் குறுந்தொகையின் அமைப்பினின்றும் வேறுபாடு இங்குக் காண்பதற்கில்லை. ஆயின் முதல்வகை அமைப்பினின்றும் வேறுபடுகின்ற கூறுகள் ஐங்குறுநூற்றில் உண்டு. திணைக்கு 100 பாடல்கள் என நிலைப் படுத்தியது ஒரு குறிப்பு. அகநானூற்றில் திணைக்கு இத்துணைப் பாடல்கள் என வரையறை இருப்பினும் திணைகளின் தலைமை நிரலிலே அந்நூல்களில் ஏற்றத் தாழ்வுகள் உண்டு. ஐங்குறு நூற்றின் தொகுப்பு முறையில் அவ்வேற்றத் தாழ்வுகள் இல்லை.

2.1.2. ஐங்குறு நூற்றின் அமைப்பில் மற்றொரு தனிச் சிறப்புண்டு. ஒவ்வொரு நூறு பாடலையும், தனித்தனிப் பத்துக் களாகப் பகுத்தமைத்த பாங்கு ஐங்குறு நூற்றில் காணப்படுகிறது. அதுமட்டுமே யன்றி ஒவ்வொரு பத்துக்கும் தனித் தனித் தலைப்புப் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. துறைப் பெயராலோ, கூற்றுக்குரியார் பெயராலோ, கேட்போர் பெயராலோ, முதல் அல்லது கருப் பொருளின் வகையாலோ, பாடலில் வரும் சொல் அல்லது தொடர்வகையாலோ இத் தலைப்புப் பெயர்கள் அமைந்துள்ளன. மேலும் 'தொண்டிப் பத்தில்' இடைக்கால இலக்கியத்தில் 'சிற்றிலக்கிய' வகைகளில் ஒன்றாகத் தோன்றிய அந்தாதிக்கு வித்திடப் பட்டுள்ளது.

2.2.0. இரண்டாவது வகையில் அடங்கும் கலித்தொகையில் அமையும் பாடல்களை யாத்த புலவர்களைப் பற்றிய நினைவுக் குறிப்புச் செய்யுள் வருமாறு:

"பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருதம்—அருஞ்சோழன்
நல்லுருத்தி ரன்முல்லை நல்லந் துவன் நெய்தல்
கல்விவலார் கண்ட கலி"

2.2.1. கலித்தொகையிலுள்ள 150 பாடல்களின் திணைப் பாகுபாடு வருமாறு:

கடவுள் வாழ்த்து	1	(1)
பாலைக்கலி	2—36	(35)
குறிஞ்சிக்கலி	37—65	(29)
மருதக்கலி	66—100	(35)

முல்லைக்கலி	101—117 (17)
நெய்தற்கலி	118—150 (33)

2.2.2. கலித்தொகையில் ஆசிரியர் அல்லது ஆசிரியர்கள் பற்றி ஆராய்ச்சியாளர்களிடையே கருத்து வேறுபாடுண்டு. நெய்தற்கலி பாடிய நல்லந்துவனாரே கலித்தொகை முழுவதும் பாடினர் என்று கருதுவோர் மேற்குறித்த செய்யுளில் உள்ள ஐவர் பாடி ஐந்தாமவர் தொகுத்தார் என்று கருதுவோர் என இருசாரார் உளர். கலித்தொகையை முதன் முதலில் பதிப்பித்த சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் "நல்லந்துவனார் கலித்தொகை" என்று குறித்துள்ளமை கருதத்தக்கது.

2.2.2. அகத்திணை நூல்களில் கலித்தொகை தனித் தன்மை வாய்ந்தது. ஏனைய நூல்களில் ஒவ்வொரு பாடலும் தனித்தனி மாந்தரின் கூற்றாக (Dramatic Monologue) அமைந் திருக்கும். இதற்கு விதி விலக்காக ஐங்குறு நூற்றிலும் ஏனைய தொகை நூல்களிலும் சில பாடல்கள் உண்டு. ஆனால், கலித் தொகையின் ஒவ்வொரு பாடலும் பாத்திரங்களின் உரையாட லாக அமைந்து பாடல் ஒவ்வொன்றும் சிறு நாடகம் போல அமைந்திருத்தலைக் காணலாம். நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு ஆகியவை ஆசிரியப்பாக்களால் ஆனவை. ஆதலின் அவற்றில் இசைப்பாங்கிற்கு அத்துணை வாய்ப்பு இல்லை யெனலாம். கலித்தொகையோ, கலிப்பாக் களால் ஆயினமையின் ஏனைய தொகை நூல்களினும் இசைப் பாங்கு மிகுதியாய்ப் பெற்றிருத்தல் நோக்கத்தக்கது.

2.2.3. கலித்தொகையின் மற்றொரு பண்பு கைக்கிளை, பெருந்திணைகளோடு அது பெற்றிருக்கும் இயைபு ஆகும். தொல்காப்பிய உரையாசிரியர் மூவரும் கைக்கிளைக்கும் பெருந் திணைக்கும் கலித்தொகையிலிருந்தே மேற்கோள் காட்டி யுள்ளனர்.

2.3.0. இவ்விரண்டாம் பிரிவில் அமைகின்ற இருநூல் களின் அமைப்பைப்பற்றி மற்றொரு குறிப்பினை நாம் மனம் கொள்ளல் வேண்டும். ஒரே புலவர், ஒரே திணையில் பல பாடல்கள் பாட வேண்டிய கட்டுப்பாடு இந்நூல்களின் தனி இயல்பாகும். இக்கட்டுப்பாடு காரணமாகப் புலவர் பெரு மக்களின் கற்பனைத் திறனுக்குப் பெரிதும் சோதனை ஏற்படுவது இயல்பு. ஒரு திணையில் ஒரு பாடல் அல்லது ஒரு சில பாடல்கள் பாடுவதாயின் புலவரின் கற்பனை ஆற்றலுக்குச் சோதனையாக அமையாது. ஆயின், இவ்விரு நூல்களிலும் ஒரே புலவர் ஒரே திணைபற்றி மிகப் பல பாடல்கள் பாடியுள்ளதைக் காண்

கிறேம். முல்லைக் கலி பாடிய சோழன் நல்லுருத்திரனுர் 17 பாடல்கள் பாடியுள்ளார். ஐங்குறு நூற்றிலோ ஒவ்வொரு திணைக்கும் 100 பாடல்கள். எனவே, இவ்விரு நூல்களிலும் புலவரின் கற்பனை ஆற்றலுக்குச் சோதனை சிற்றெல்லை 17 ஆகவும், பேரெல்லை 100 ஆகவும் அமைந்திருத்தலைக் காண்கிறேம். இவ்விரண்டாம் வகை நூல்களில் பாடல்களின் அமைப்பு, கருவானும், உருவானும் பல்வேறு வகையினவாகிப் பெருகி இருக்கக் காண்கிறேம்.

3.0. இனி, அகப்பாடல்களின் மூன்றும் வகையினைக் காண்போம். இவ்வகையில் பத்துப்பாட்டில் அமைந்துள்ள நான்கு நெடும்பாட்டுக்கள் அமைகின்றன. பத்துப்பாட்டில் உள்ள பாடல்களைப் பாடியோர் இன்னுரென்பதைப் பின்வரும் பாடல் புலப்படுத்துகிறது.

முருகும்நல் வாடையும் கீரன்முடத் தாமக்கண்ணி பொருந்
மருவுபாண் பாலை உருத்திரங் கண்ணன் மகிழ்ச்சிறுபாண்
புரியுந்நந் தத்தன் மருதன்நன் காஞ்சி நப்பூதன்முல்லை
வருமெம் கபிலன் குறிஞ்சி மலைபடுகடாம் கௌசிகனே.

3.1.0. இவற்றுள் அகத்திணைப் பாடல்களாகக் கொள்வதற்குரியன நான்கு ஆகும்.

(1) முல்லைப்பாட்டு — நப்பூதனுர் — 103 வரிகள்
(2) நெடுநல்வாடை — நக்கீரனுர் — 188 வரிகள்
(3) குறிஞ்சிப்பாட்டு — கபிலர் — 261 வரிகள்
(4) பட்டினப்பாலை — உருத்திரங் கண்ணனுர் — 301 வரிகள்

இந்நெடும் பாடல் வகையில் சிற்றெல்லை 103 வரிகள்; பேரெல்லை 301 வரிகள்; இவை யாவும் ஆசிரியப்பாக்களால் ஆனவை. அகனைந்திணைகளுள் மருதத்திணை தவிர ஏனைய நான்கு திணைகட்கும் ஒவ்வொரு பாடல் அமைந்துள்ளது. திணைக்கொரு பாடலாக மிக நீளமாக இவை அமைந்திருத்தலால் நுண்ணிய விவரங்கள் மிகப் பல கொடுத்துத் திணைகளின் உணர்வு நிலைகளை மிக விரிவாகப் பாடுதற்குப் பத்துப் பாட்டுப் புலவர்களுக்கு வாய்ப்பு அமைந்துள்ளது.

4.0. இனி நான்காவது வகையாக அமைவது பரிபாடல் ஒன்றே.

4.1.0. ஏனைய தொகை நூல்கள் பெரும்பான்மையும் அகவற் பாக்களாகவும், கலிப் பாக்களாகவும் அமைந்திருக்கப் பரிபாடல் முற்றிலும் வேறுபட்ட பான்மை பெற்றுள்ளது. இசை

நலத்தையே முதன்மையாகக் கொண்டிருப்பது இந் நூலின் தனிச்சிறப்பு. இதற்குரிய விதிகள் தொல்காப்பியத்துள் ஏழு நூற்பாக்களால் விளக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் இவ் விடத்திற்கு வேண்டிய நான்கு நூற்பாக்களை மட்டும் காண்போம்.

நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே
கைக்கிளை பரிபாட்டு அங்கதச் செய்யுளொடு
ஒத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின.

(*தொல். செய்யுளியல் 117*)

பரிபா டல்லே தொகைநிலை வகையின்
இதுபா வென்னும் இயல்நெறி யின்றிப்
பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப.

(*தொல். செய்யுளியல் 119*)

பரிபாட் டெல்லை
நாலீ ரைம்பது உயர்வடி யாக
ஐயைந் தாகும் இழிபடிக் கெல்லை.

(*தொல். செய்யுளியல் 160*)

கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்தொடு
செப்பிய நான்கும் தனக்குறுப் பாகக்
காமம் கண்ணிய நிலைமைத் தாகும்.

(*தொல். செய்யுளியல் 120*)

மேற்கண்ட நூற்பாக்களினின்றும் நாம் அறிகின்ற கருத்துக்கள் பின்வருமாறு தொகுத்து உணரற்பாலன:

''பலவகைப்பா அடிகளையும் ஏற்றுவரும் என்னும் இலக் கணத்தால் பரிபாடல் இசை நலம் வாய்ந்ததென அறிகிறோம். இஃது இன்பம் நுதலிவரும் என்பதால் அகப்பொருள் வரும் என்பதை அறிகிறோம். 25 முதல் 400 அடி வரையும் இப் பாடல் நிமிர்ந்து நடைபெறும். தரவு, எருத்தம், அராகம், கொச்சகம், மடக்கியல், வாரம் என்னும் உறுப்புக்களுடன் பண்ணும் கலந்து இஃது இயங்கும்''*.

4.1.1. இன்று நமக்குக் கிடைத்துள்ள பரிபாடல் நூலின் பாடல்களை நோக்குவோமாயின் அவை, பொதுவில் உணரப் பட்ட யாப்பிலக்கண வகையோடு இணைத்து உணர்தற்கு அரி யன என்பதை அறியலாம். ஆராய்ச்சியாளர்கள் பரிபாடல் என்னும் பாவகை வழக்கொழிந்து விட்டது என்று கூறுவர். இவண்,

---

* *பேராசிரியர் கு. அருணசலக் கவுண்டர்—பரிபாடற் சொற் பொழிவுகள் : தலைமையுரை.*

"கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்
உரிய வாகும் என்மனார் புலவர்"

எனப் பாடல் சான்ற புலனெறி வழக்கிற்குரிய யாப்புக்களைத் தொல்காப்பியர் கூறியுள்ளமை கருதத்தக்கது. அகப்பொருட் செய்திகளுக்குக் கலியும் பரிபாட்டுமே சிறப்புரிமை உடையன எனத் தொல்காப்பியர் விதித்திருப்பவும் மிகப் பெரும்பான்மையான பாடல்கள் அகவற்பாக்களாக அமைந்துள்ளன.

4.2. பரிபாடல் பற்றிய மற்ருெரு மனங்கொள வேண்டிய குறிப்பு, அஃது இசைப்பாடல் என்பதாகும். நமக்குக் கிடைத்துள்ள பரிபாடல்களில் ஒவ்வொன்றின் இறுதியிலும் அப்பாடற்குரிய பண்ணும், இசை வகுத்தோர் பெயரும் காணலாம். பரிபாடல் கலித்தொகையின் ஓசை நலத்தையும், ஏனைய தொகை நூல்களின் பொருளமைதியினையும் பெற்றுள்ளது. இக் கட்டுரையின் முற்பகுதியிற் கண்ட ஏனைய மூன்று வகைகள் போல் அல்லாது இப்பரிபாடல் அகமும் புறமும் விரவி அமைந்துள்ளது. அகத்திற்கே உரிமையுடையனவும், புறத்திற்கே முற்றிலும் சார்ந்தனவும், இரு பொருளும் ஒருங்கிணையப் பெற்றனவும் என மூவகைப் பாடல்கள் இந்நூலின்கண் அமைந்துள்ளன.

4.3.0 பரிபாடலைச் சங்க இலக்கியங்களுள் ஒன்ருகக் கொள்வது குறித்துக் கருத்து வேற்றுமைகள் உள்ளன. பத்துப் பாட்டிலும், பரிபாடல் தவிர்த்த ஏழு தொகை நூல்களிலும் புராணச் செய்திகள் இல்லாமலில்லை. அவற்றுள்ளும் கலித் தொகையுள் புராணச் செய்திகள் ஓரளவு மிகுதியாக இருப்பதைக் காணலாம்.

ஆராய்ச்சியாளர்கள் சிலர் தொகை நூல்களுள் கலித் தொகையும், பரிபாடலும் பிற்பட்டவை என்று கூறுவர். "The Chronology of Early Tamils" என்ற நூலைச் சிறப்புற எழுதியுள்ள அறிஞர் திரு. K. N. சிவராஜப் பிள்ளையும் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையும் இக்கருத்துடையவர்கள். அவர்களது முடிவுக்குப் பிற காரணங்களோடு புராணச் செய்திகளின் பெருக்கமும் ஒரு காரணமாகக் கொள்ளப்படுகின்றது. ஆயின் இவ்விரு நூல்களும் பிற்சங்க நூல்களென்ருே, பிற்கால நூல்களென்ருே ஆய்வாளர்களிடையே ஒருமித்த கருத்து அமையவில்லை.

4.3.1. சங்க நூல்கள் அனைத்தும் முன்பின் என்று பார்த்தற்கு இடமின்றி ஒரு தொகுப்பாகவே கொள்ளற்பாலன என்று கருதும் ஆராய்ச்சியாளர்கள் உள்ளனர். ஆகப் புராணக் கருத்துக்களின் மிகுதியான பயிற்சியைக் கொண்டு சங்க நூல்

களுள் சிலவற்றை முன்னதாகவோ சிலவற்றைப் பின்ன தாகவோ கொள்ள இயலாது.

4.3.2. சங்க இலக்கியப் போக்கிலிருந்து சொல் நடையாலும், பொருள் அமைதியாலும் பரிபாடல் பெரிதும் வேறுபட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. வடமொழிச் சொற்கள், வடமொழியைச் சார்ந்த புராணக் கதைகள் பரிபாடலில் பெரும் அளவிற் காணப்படுகின்றன. ஆயினும், சிலப்பதிகாரம், மணிமேகலை காலத்திற்கு முன்பே பரிபாடல் எழுந்திருக்க வேண்டுமென்பதில் தடையிருத்தல் இயலாது. எனவே, இதனையும் தொகை நூல்கள் என்ற அமைப்பிலேயே பண்டைய உரையாசிரியரும், சான்றோரும் அடக்கினர்.

4 4. பொருளமைதியில் அகம், புறம் என்று தெளிவுபடப் பிரித்தறிதற்கு இடம் தருவது சங்க இலக்கிய அமைதி. ஆயின் பரிபாடல் அகமும் புறமும் இடை மிடைந்து வருதலைத் தன் அமைதியாகக் கொண்டுள்ளது. சங்க நூல்களுள்—முற்சங்கமோ பிற்சங்கமோ எதனைச் சார்ந்திருப்பினும்—பரிபாடல் தனித்தன்மையுடையது என்பதில் ஐயமில்லை.

தொகையினும் பாட்டினும் அமைந்த நூல்கள் அகப்பொருள் நோக்கிலே பொதுவாக அறிமுகம் செய்யப்படுகின்ற அளவில் இக்கட்டுரை நிறைகின்றது.


உரைநடை வளர்ச்சி

பண்டைத்தமிழ் இலக்கணங்களும், இலக்கியங்களும் பழம் புலவர்கள் எழுதிய உரையுடன் அச்சிடப்பெற்று வெளிவந்த பின்னரே தமிழ் உரைநடை செப்பமுற்றதெனின் அது மிகையாகாது. முது பெரும் புலவர் சாமிநாதையரவர்கட்குப் பெரும்புலவர்களாகிய சி. தியாகராச செட்டியார், ஞானியாரடிகள், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், நாகை வேதாசலம் பிள்ளை (பிற்கால மறைமலையடிகள்) முதலியோர் எழுதிய கடிதங்களையும், திரு ஐயர் அவர்கள் பிற புலவர்கட்கு எழுதிய கதடிங்களையும் நாகை வேதாசலம் பிள்ளையவர்கள் 1898 இல் சென்னைக் கிறித்தவக் கல்லூரியிற் பண்டிதரான பின் எழுதிய கடிதங்களோடும், சங்க இலக்கியங்கள் வெளிவந்த பின் பிற்காலப் புலவர்கள் எழுதிய கடிதங்களோடும்—ஒப்பிடும்போது தமிழ் உரைநடை எத்துணைச் சீரும் சிறப்பும் அமைந்துள்ள தென்பது நன்கு விளங்குகின்றது. 1920 இல் வடமொழிக் கலப்பால் தமிழ்மொழிக்கேற்பட்ட பொல்லாங்கினை இப்போதுதான் உணர்ந்தேம் என்று கூறிப் பிறமொழி கலவாமல் நூல்கள் எழுதுவதென்றும் அவைகளில் பேசுவதென்றும் உறுதிபூண்டு எழுதியும் பேசியும் வந்த பின்னரே செந்தமிழ் உரைநடை வளர்ச்சியுற்றுப் பீடும் பெருமையும் எய்தியுள்ள தென்பது வெள்ளிடைமலையாகும்.

வ. சு.

பாராட்டுப் பெற்ற புலவர்

சிறந்த தமிழ்ப் புலவரும், ஆராய்ச்சியாளரும், நூலாசிரியருமான உயர்திரு. செந்துறை முத்து அவர்களின் இலக்கியப் பணிகளைச் சிறப்பிக்கும் வண்ணம் செந்துறை திருநாவுக்கரசு மன்றத்தார் 30-9-73இல், இவரது 100வது நூலாகிய 'கந்த கோட்டம்' என்னும் நூலையும், 101வது நூலாகிய 'முருகன் உறை விடங்கள்' என்னும் நூலையும் விழா எடுத்து வெளியிட்டுப் பாராட்டிப் புலவர் அவர்கட்குச் 'செந்தமிழ் வித்தகர்' என்னும் சிறப்புப் பட்டமும் வழங்கினர்.



விழாவிற்குத் திரு சண்முக சுந்தரம் பிள்ளையவர்கள் தலைமை தாங்க அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. ச. மெய்யப்பன் அவர்கள் 'கந்த கோட்டம்' என்னும் நூலையும், அமுதமொழி திரு. சோமசுவாமிநாத பிள்ளையவர்கள் 'முருகன் உறை விடங்கள்' என்னும் நூலையும் முறையே வெளியிட்டுப் பாராட்டுரை நிகழ்த்தினர்.

அனைத்திந்திய எழுத்தாளர் பெருமன்றச் செயலர் திரு. கவிதாமணி அ. வெ. ரா. கிருட்டிணசுவாமி ரெட்டியார் அவர்கள் புலவர் அவர்கட்குப் பொன்னாடை போர்த்திச் 'செந்தமிழ் வித்தகர்' என்னும் பட்டத்தை அளித்துச் சிறப்பித்தார்.

பாராட்டுப் பெற்ற புலவர் அவர்கட்கு எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இயல்—இசை—நாடக மன்றம்

சென்னைப் பல்கலைக் கழகத்தில் 12—10—73இல் நடந்த பம்மல் சம்பந்த முதலியார் நூற்றாண்டு விழாவில் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பேசியபோது "சங்கீத நாடக சங்க"த்தின் பெயர் "இயல்—இசை—நாடக மன்றம்" என்ற தூய தமிழ்ப் பெயராக மாற்றப்படும் என்று அறிவித்தார். அது குறித்து நாமும் மிக மகிழ்வதோடு அன்னாரையும் அவர் தமிழ்ப்பற்றையும் பெரிதும் பாராட்டுகின்றோம்.

மைசூர் "கன்னடநாடு" ஆகியது

தமிழ் இனம், தமிழ்மொழி, தமிழ்ப்பற்று இவற்றை அடிப்படையாகக்கொண்டு சென்னைமாநிலம் என்ற பெயரை மாற்றித் "தமிழ்நாடு" என்ற பெயரை அமைத்துக்கொண்டது போலவே 1—11—73 முதல் நம் அண்டை மாநிலமான மைசூர் "கன்னடநாடு" ஆகின்றது. அது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

செய்திகளும் குறிப்புகளும்

மறைமலையடிகள் நூல் நிலையம் பற்றி முதுபெரும் புலவர் நீ. கந்தசாமி பிள்ளை அவர்களின் கருத்துரை

ஒருவர் வாழ்க்கையில் தெய்வீக நினைவுடையனவாகச் செல்லும் நாள்கள் ஒரு சிலவேயாகும். அத்தகைய நாள்களில் என் வாழ்க்கையில் முதலாவதாகக் கருதிப் போற்றத்தகும் நன்னாள் (7-10-1973) இந் நாளாகும். 'வாழ்க்கையின் பயனைப் பெற்றேன்' எனக் கூறின் மிகையாகாது. தமிழ் மக்கள் ஒவ்வொருவர் சிந்தையிலும் சென்னியிலும் வீற்றிருக்கும் மறைமலை யடிகளாரை நேரிற் கண்டு அளவளாவிய நாள்களும் உண்டு. ஆனால் இன்றுதான் அடிகளாரையும் தமிழ்த் தெய்வத்தையும் சைவசமயத்தையும் ஒன்றாகக் கண்டேன்; மகிழ்ந்தேன்; அளவற்ற ஆனந்தம் கொண்டேன். பயன் பெறுவதற்குப் பன்னாள் இங்கிருந்து பயில விழைகிறேன். என் உழுவலன்பரும் அண்ணனும் ஆகிய தாமரைச் செல்வர் திருமி த. வ. சு. பிள்ளை யவர்களுடைய பேருழைப்பும்,



பேரன்பும், வழிவழித் தொண்டும் இந்நூல் நிலைய வழியாகத் தமிழகத்தை வாழ்விக்கின்றன. "வாணன் புகழ் எல்லை வாழ்த்துவோர் நாவெல்லை" என்பதுபோல இந் நூல்நிலையம் புகழும் பயனும் பயில்வோர் அறிவு அன்பு இவற்றின் எல்லையேயாகும். வாழ்க இந்நூல் நிலையம்; வாழ்க அடியேனை வலிந்தாண்டு கொண்ட தாமரைச் செல்வர். வாழ்க இங்குத் தொண்டாற்றும் பேறு பெற்ற அறிஞர் குழாம்.

(ஒ - ம்) நீ. கந்தசாமி

பள்ளிப் பிள்ளைகளின் படிக்கும் ஆர்வம்

பள்ளியிற் பயிலும் மாணவர்கள் பாடப்புத்தகமல்லாத புத்தகங்களைப் படிப்பதே இல்லை என்பதை அண்மையில் புள்ளிக் கணக்கிட்டுக் கண்டுபிடித்துள்ளார்கள்.

இந்தியாவில் தொடக்கப் பள்ளியில் படிக்கும் மாணவன் சராசரியாக ஆண்டொன்றுக்குப் பொது நூல் ஒன்றே ஒன்றுதான் படிக்கிறான். பள்ளி நூலகங்களில் துணைப்பாட நூல்களும் பொது அறிவு நூல்களும் இல்லை.

இந்திய அரசின் கல்வித்துறை 88 பள்ளிகளில் இந்த ஆய்வை நடத்தியது. அவற்றில் 12 பள்ளிகளில் நூலகங்கள் இல்லை. 80 பள்ளிகளிலும் சேர்த்து மொத்தம் 7,208 நூல்களே உள்ளன. ஒரு மாணவனுக்கு அரைப் புத்தகம்தான் கிடைக்கும். இவையும் அன்பளிப்பாகக் கிடைத்தவையே. ஒரு மாணவனுக்கு ஆறு காசு என்ற அளவில்தான் புத்தகம் வாங்கச் செலவழிக்கப்படுகின்றது.

இந்த 80 பள்ளிகளில் 32 பள்ளிகளே ஆண்டுதோறும் புதிய நூல்கள் வாங்குகின்றன. அதிலும் 6 பள்ளிகள் ஆண்டுக்கு 5 முதல் 20 புத்தகங்களே வாங்குகின்றன. ஆண்டுதோறும் புதிய நூல்கள் வாங்குவதற்குக் கல்வித்துறை இயக்குநர்கள் பணமே ஒதுக்குவதில்லையாம்.

குற்ற இயல் துறையில் ஆய்வு

சமுகப் பொருளாதார முறைகளில் முன்னேறிவரும் நாடுகளில் குற்றங்கள் குறைய வேண்டுமென்று உயர்நீதிமன்ற நீதிபதி இராம பிரசாதராவ் குறிப்பிட்டுள்ளார். எனவே குற்ற இயல் துறையில் ஆய்வு நடத்த வேண்டுமென்று அவர் குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர் கா. சு. பிள்ளை யவர்கள் சட்டத் துறையில் பேரறிஞராக விளங்கியவர். 'எம். எல். பிள்ளை' என்று அவர் பெற்ற 'எம். எல்.' பட்டத்தை வைத்துக் குறிப்பிடுவதுண்டு. அவர் 'குற்ற இயலின் அடிப்படை உண்மைகள்' (Principles of Criminology) என்று பெரிய நூலை ஆங்கிலத்தில் எழுதித் 'தாகூர் சட்ட விரிவுரையாளர்' என்ற பட்டமும் பரிசும் பெற்றார்.

குற்ற இயல் துறையில் ஆய்வு நடத்த வேண்டுமென்று இன்று கூறுகையில் அந்நூலை மீண்டும் காலத்துக் கேற்ற வகையில் திருத்தி வெளியிடுதல் நல்லது.

விண்வெளி ஆய்வுக் கூடம்

அமெரிக்கா செலுத்திய இரண்டாவது விண்வெளி ஆய்வுக்கூடம் 59½ நாள் பறந்துவிட்டுச் செப்டம்பர் 26 இல் பூமிக்குத் திரும்பியது. இதில் மூன்று விண்வெளி வீரர்கள் பயணம் செய்தனர். இவ்வளவு நீண்டகாலம் தொடர்ந்து இதுவரை யாரும் விண்வெளியில் பறந்த தில்லை. சூன் 22 அன்று வந்த முதல் ஆய்வுக் கூடம் 28 நாள்தான் பறந்தது.

நீண்ட பயணத்திற்குப் பின் வீரர்கள் நலமாக இறங்கினர். யாரும் சோர்வுடன் காணப்படவில்லை. ஏறத்தாழ 60 நாட்கள் அவர்கள் எடை யற்ற நிலையில் வாழ்ந்துள்ளனர். சந்திரனைவிட மிகத் தொலைவிலுள்ள கோள்களுக்குச் செல்வதற்கு நீண்டகாலமாகும். மனிதனால் இவ்வளவு நீண்ட பயணத்தை மேற்கொள்ள முடியுமா என்பதை ஆய்வதற்கே இத்தகைய ஆய்வுக் கூடங்கள் அனுப்பப் பெறுகின்றன.

இதைவிட நீண்ட பயணத்திட்டத்துடன் மூன்றாவதும் இறுதி யானதுமான விண்வெளி ஆய்வுக் கூடம் நவம்பர் மாதத்தில் அனுப்பப் பெறும்.

காந்தியடிகள் பிறந்தநாள் பெருவிழா, அருட்பிரகாச வள்ளலார் திருநாள்

இராமலிங்கர் பணி மன்றத்தின் சார்பில் காந்தியடிகள் பிறந்தநாள் விழாவும், அருட்பிரகாச வள்ளலார் வெள்ளணி விழாவும் கடந்த 29—9—73 முதல் 5—10—73 முடிய மயிலை ஏ. வி. எம். இராசேசுவரி திருமண மண்டபத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. 29—9—73 இல் தொழிலதிபர் நா. மகாலிங்கம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தத் துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் தலைமை தாங்க, எம். ஏ. மாணிக்கவேலர் தொடக்கவுரை யாற்றத் திருவாளர்கள் இரா. அரங்கசாமி, நா. கிரிதாரி பிரசாத் ஆகியோர் விரிவுரை யாற்றினர்

30—9—73 இல் 'அருட்சோதி வள்ளலும் அகிம்சை வள்ளலும்" என்னும் பொருள் பற்றிக் கலைமாமணி எஸ். டி. சுந்தரம் தலைமையில் கவியரங்கமும், 1—10—73 இல் திரு எஸ். சோமயாஜுலு அவர்கள் தலைமையில் பேராசிரியர் இரா. இராதாகிருட்டிணன், நா. கிரிதாரி பிரசாத் ஆகியோரின் விரிவுரைகளும், 2—10—73 இல் திரு. க. அருணை

சலம் அவர்கள் தலைமையில் நூல் வெளியிடலும் பாராட்டுதல்களும் நிகழ்ந்தன. 3—10—73 இல் திரு கோ. பூவராகவன் அவர்கள் தலைமையில் விரிவுரைகளும், 4 10—73 இல் திரு. பெ. தூரன் அவர்கள் தலைமையில் விரிவுரைகளும், 5-10—73 இல் தொழிலதிபர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் திருவருட்பாத் திருமுறை பற்றிய கருத்தரங்கமும் நடைபெற்றது. அன்று மாலை டாக்டர் பா. நடராசன் அவர்கள் தலைமையில், கல்வி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். நாள்தோறும் காந்திய நெறி, வள்ளலார் நெறிகள் பற்றி உரையாற்றிய திரு. கிரிதாரி பிரசாத் அன்றும் அரிய விரிவுரை யாற்றினார். திரு. நா. மகாலிங்கம் அவர்கள் நன்றி நவில விழா இனிது முடிந்தது.

மறைமலையடிகள் நினைவு விழா

உலகத் தமிழ்க் கழகத்தின் மயிலைக் கிளையின் சார்பாக 'மறைமலை அடிகள் நினைவு விழா' 16—9—73 அன்று சிந்தை வேதாந்த சங்கக் கட்டிடத்தில் சிறப்பாக நடந்தேறியது. விழாவிற்குத் 'தமிழம்' ஆசிரியர் செம்பியன் தலைமை தாங்கினார். அடிகள் புகழ் பாடும் பாவரங்கத்திற்குப் புலவர் தி. நா. அறிவு ஒளி அவர்கள் தலைமை யேற்றார். பாவலர்கள் வெற்றியழகன், குழலோன், தமிழ்த்தாசன் ஆகியோர் பாவரங்கிற் பங்கு கொண்டனர். அடிகளாரின் திருமகனார் திரு. மறை. திருநாவுக்கரசு அவர்கள் சிறப்புச் சொற்பொழி வாற்றினார்கள் மயிலைக் கிளையின் சார்பாக மூன்று தீர்மானங்களை அமைப்பாளர் வலவன் அவர்கள் மொழிய ஒருமுகமாக அவை நிறைவேற்றப்பட்டன. அவை யாவன :

1. தனித்தமிழியக்கத் தந்தையாரான அடிகளார்க்குச் சென்னையில் சிலை நிறுவிச் செந்தமிழன்பர்களின் நெடுநாட்கனவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

2. அடிகளாரின் அரிய நூல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் போன்றவற்றைக் கல்வித் துறையில் முழுமையாகப் பயன்படுத்துமாறு கல்வித் துறையினரை வேண்டிக் கொள்கிறோம்.

3. அஞ்சல் தலைகளில் அடிகளாரின் உருவைப் பொறித்துச் சிறப்பிக்குமாறு நடுவண் அரசிற்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமாறு வேண்டப்படுகிறது.

பின்னர்த் திரு. மு. இரும்பொறை நன்றி நவில விழா இனிதே நிறைவுற்றது.

ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றம் சட்டச் சொற்பொழிவுகள்


பட்டி மன்றத் தலைவரும், தமிழ்நாடு சட்டப் பேரவைச் செயலாளருமான சட்ட அறிஞர் திரு மா. சண்முக சுப்பிரமணியம் அவர்கள் 16—10—73 செவ்வாய்க் கிழமை மாலை 6 மணியளவில், எசுபிளனேடு ஒய். எம். சி. ஏ., மண்டபத்தில் சட்டத் தொடர் சொற்பொழிவினை நிகழ்த்துவார்.

தொழில்-சட்ட அமைச்சர் மாண்புமிகு செ. மாதவன் அவர்கள் இத் தொடர் சொற்பொழிவினைத் தொடங்கி வைப்பார். தமிழக உயர்நீதி மன்ற நீதிபதி மாண்புமிகு பு. ரா. கோகுலகிருட்டிணன் அவர்கள் இவ் விழாவிற்குத் தலைமை தாங்குவார்.

பட்டி மன்றப் பணிகளுள் இது மிக மிகச் சிறந்த பணியாகும். இச் சொற்பொழிவினைக் கேட்கும் அன்பர்கள் ஓரளவு சட்ட அறிவு பெற இஃதொரு நல்ல வாய்ப்பாகும்.

தமிழ் மாநில சித்த வைத்திய சங்கம்

தமிழ் மாநில சித்த வைத்திய சங்கத்தின் சார்பில் 7—10—73 மாலை, சென்னை, மறைமலை யடிகளார் நூல் நிலையத்தில் அமைந்துள்ள வள்ளலார் திருவருள் மண்டபத்தில் சிறப்புச் சொற்பொழிவு, டாக்டர் பு. மூ. வேணுகோபால் எம். பி. ஐ. எம். அவர்கள் தலைமையில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் மேலைப் புலோலி டாக்டர் சோதிடர் முருகவேள் பாலசுந்தரம், பி. ஓ. எல்., எப். ஆர். ஏ. எசு, அவர்கள் 'சித்தர்



பல்கலைப் புலவர் முருகவேள் பாலசுந்தரம் அவர்கள்
சித்தர்களும் சித்த மருத்துவமும் பற்றிப் பேசுகிறார்.

களும் சித்த மருத்துவமும்' என்னும் பொருள்பற்றி, சீரிய சிறப்புச் சொற்பொழிவாற்றினர். சித்த மருத்துவர்களும், தமிழ் அறிஞர்களும் வந்திருந்து சொற்பொழிவினைக் கேட்டனர். திரு. முருகவேள் பாலசுந்தரம் அவர்களின் சொற்பொழிவு சித்த மருத்துவத்திற்குப் புத்துயிர் ஊட்டுவதாயிருந்தது. சங்கச் செயலாளர் எ. ஜி. கணபதி அவர்கள் நன்றிகூற நிகழ்ச்சி இனிது முடிந்தது.

செட்டிநாட்டு இராணி மெய்யம்மை ஆச்சி 69 ஆம் பிறந்தநாள் விழா

டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் குழு அலுவலர் மனமகிழ் மன்றத்தின் சார்பில் 11—10—73 மாலை சிருங்கேரி சகத்குரு பரவசன மந்திரமண்டபத்தில் செட்டிநாட்டு அரசி மெய்யம்மை ஆச்சி அவர்களின் 69 ஆம் பிறந்தநாள் விழா, தமிழ்க் கடல் திரு ராய சொக்கலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கவிஞர்கோ. புத்தனேரி சுப்பிரமணியம், திருவாட்டி அன்னபூரணி வீரப்பன், திரு. மெய்யப்பன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். பரிசு வழங்கல், ராணி மெய்யம்மை மகளிர் உயர்நிலைப் பள்ளி மாணவிகளின் கலைநிகழ்ச்சி ஆகியவை நடைபெற்றன. மன்றச் செயலர் நன்றிகூற விழா இனிது முடிந்தது.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

கழகப் புதிய வெளியீடுகள்

மார்ட்டின் ராட்லர் (Martin Rattler)

—சுருக்கத் தமிழாக்கம்: **இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.**

மார்ட்டின் என்னும் பள்ளிச் சிறுவனைப் பற்றியது இக்கதை. அவன் கடற்பயணம் சென்று வெளிநாட்டில் பட்ட துன்பங்கள் - வைரச் சுரங்கம் கண்ட விந்தை - பல இடங்களில் சிக்கி அவற்றி னின்றுமீண்டமுறைகள் ஆகியன விளக்கப்படுகின்றன. சிறுவர்கள் படித்து மகிழத்தக்க கதை. நூலகங்களில் இருக்க வேண்டிய சிறந்த கதை. **விலை ரூ. 4 50**

ஒரே ஒரு பிள்ளை

—**புலவர் ச. தமிழ்வேலன், க.மு.**

இஃது அரசினர் பரிசு பெற்ற நூல். தமிழ் இலக்கியச் சுவை குடும்ப வாழ்க்கை, கடமை உணர்வு இன்னபிற செய்திகள் கதை வடிவில் விளக்கப்படுகின்றன. இளமையிற் கல்வி பயிலத் தவறியோர் முதுமையில் படித்துப் பயன்பெற உதவும் வகையில் எழுதப் பட்டுள்ளது. **விலை ரூ. 2 50**

வழிபாட்டுக்குரிய கழக நூல்கள்

இரண்டாந் தொகுதி — 10 நூல்கள்

வழிபாட்டிற்குரிய தேவாரத் திரட்டு	ரூ. 0 25
வழிபாட்டிற்குரிய திருப்புகழ்த் திரட்டு	0 25
வழிபாட்டிற்குரிய பிரபந்தத் திரட்டு	0 25
திருவெம்பாவை உரையுடன்	0 25
திருப்பாவை உரையுடன்	0 25

வள்ளலார் அருளியவை

திருவொற்றியூர் மாணிக்கத்தியாகர் புகழ்மாலை	0 30
தில்லை அம்பலவாணர் புகழ்மாலை	0 40
திருவொற்றியூர் வடிவுடையம்மை புகழ்மாலை	0 40
சென்னைக் கந்தகோட்டப் புகழ்மாலை	0 30
திருத்தணிகை முருகன் புகழ்மாலை	0 30

பிளாஸ்டிக் கூட்டிலுள்ள இப் பத்து நூல்களுக்கும்

விலை ரூ. 3 - 50

பதிவு எண் : M. 4899

பிற பதிப்பாளரின் வெளியீடுகள்

யாவரும் கேளிர்—இரா. நாகசாமி

பழந்தமிழர்களின் சமுதாய அமைப்பு, வாழ்க்கை முறை ஆகியவற்றை இலக்கிய அடிப்படையில் சித்திரிக்கும் ஆராய்ச்சி நூல் 7 50

சங்க இலக்கிய உவமைகள்—டாக்டர் ரா. சீனிவாசன்

சங்க இலக்கியங்களில் வரும் உவமை நயங்களைப் பற்றிய ஒரு சிறந்த ஆராய்ச்சி நூல். 15 00

சோவியத் நாட்டில் நான் கண்டதும் கேட்டதும்
—சு. ந. சொக்கலிங்கம், எம்.ஏ.

இந்நூலாசிரியர் சோவியத் நாட்டில் கண்ட காட்சிகளையும், அந்நாட்டு அரசியல் சமுதாய அமைப்புகள் பற்றியும் செவி வழிக் கேட்ட செய்திகளையும் விவரிக்கும் நூல். 7 00

பக்தி இலக்கியம்—டாக்டர் ப. அருணாசலம்

பத்திச் சுவை நனி சொட்டச் சொட்ட இயற்றப்பட்டுள்ள இலக்கியங்கள் பல தமிழகத்தில் உண்டு. அத்தகைய இலக்கியங்கள் பற்றித் தாம் ஆய்ந்து கண்ட உண்மைகளைக் கூறுகின்றார் இந்நூலாசிரியர். 8 00

சிலப்பதிகாரச் சிந்தனை—டாக்டர் ப. அருணாசலம்

இந் நூலில், சிலப்பதிகாரம் அகச் சான்றுகளைக் கொண்டும் பிற நூல்களோடு ஒப்பு நோக்கியும் தமிழகத்தின் வரலாற்றினை ஆராய்வார்க்குப் பயன்படும். 7 50

டாக்டர் மு. வ. வின் தமிழ் நாவல்கள்—இரா. மோகன்

டாக்டர் மு. வ. அவர்கள் பல அரிய நாவல்களை இயற்றியுள்ளார். அந்நாவல்களின் சிறப்பை விளக்கும் வகையில் செய்யப்பட்டுள்ள திறனாய்வே இந்நூல். 6 00

முன்னேறிய நாடுகளில் முப்பது நாட்கள்—சா. கணேசன்

அண்மையில் உருசியா முதலிய மேலை நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து திரும்பிய இந்நூலாசிரியர் தாம் கண்டறிந்த உண்மைகளையும் பட்டறிவினையும் இந் நூல் வழி விளக்குகிறார். 4 00

பிள்ளையார் வழிபாடு

இசைத் தட்டு ரூ. 15-00

கழக வெளியீடான பிள்ளையார் வழிபாடு "108 போற்றி" திருவாட்டி இசையரசி சீதாமணி சீனிவாசன் அவர்களால் பாடப் பட்டு இந்தியக் கிராமபோன் கம்பெனி நிறுவனத்தாரால் இசைத் தட்டில் பதிவு செய்யப் பெற்றுள்ளது. அன்பர்கள் இவ் விசைத் தட்டினைக் கழக நிலையங்களில் பெற்றுக் கேட்டு மகிழ்வார்களாக.

அப்பர் அச்சகம், சென்னை-1.